Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 195 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 08ஆம் திகதி புதன்கிழமை (22.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 29, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50


## கமெண்ட் கந்தர்...




## உஷ்



புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்குமாறுகோரி ஆளுங்கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு எம்.பிக்கள் பலர் கோரிக்கை விடுத்தனராம்.

பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பத்திரண, மஹிந்தானந்த அளுத்கமகே, சிந்தக்க மாயாதுன்ன, சனத் நிஷாந்த, சஹன் பிரதீப், சஞ்சீவ எதிரிமான்ன, மதுர விதானகே ஆகியோரே இவ்வாறு கோரிக்கை விடுத்தனராம்.

ஆனால், புதிய பொலிஸ் மா அதிபர் பதவியில் புதியவரை நியமிப்பதா அல்லது இப்போது பணியாற்றும் சந்தன விக்கிரமரத்னவுக்கு சேவை நீடிப்பை வழங்குவதா என்பது பற்றி ஜனாதிபதி இன்னமும் தீர்மானிக்கவில்லையாம்.

## பணவீக்க கட்டுப்பாட்டு மூலோபாயம் குறித்து அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும்!

### சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டலினா அறிவுறுத்து



''இலங்கை தனது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மூலோபாயம் குறித்து அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும்'' - என சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## இலங்கை இனியும் வங்குரோத்தடைந்த நாடல்ல!

## சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், கடனை மறுசீரமைக்கும் வலிமைகொண்ட நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகவும், அதன்படி இலங்கை வங்குரோத்தான நாடல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, இனிமேல் வழமையான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கும் திறன் கிடைத்துள்ளதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 02 பக்கம்

# கடனை இலங்கைக்கு வழங்கியது ஐ.எம்.எவ்!

### சர்வதேச நிதி மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியுதவியைப் பெற இத்திட்டம் உதவும்




இலங்கைக்கான கடன் உதவிக்கு நிறைவேற்றுக் குழு அனுமதியளித்துள்ள நிலையில், உடனடியாக 333 மில்லியன் டொலர் கடனை வழங்க முடியுமென சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.

இதன்படி 48 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ், 3 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு நேற்றுமுன்தினம் (20) அங்கீகாரம் வழங்கியது.

இலங்கையின் பேரண்டப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல், கடன் மீளளிக்கும் நிலையை உறுதிப்படுத்துதல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வறிய மக்கள் மீதான சுமையைக் குறைத்தல், 02 பக்கம்

## ஐ.எம்.எவ். கடன்: அமெரிக்கா வரவேற்பு



இலங்கைக்கான கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அனுமதி வழங்கியுள்ளமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இது வொரு நல்ல செய்தி என இலங்கைக் கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானமானது நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முக்கியமான நகர்வு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இலங்கை மக்கள் அனைவரும் செழிப்பாக வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு, நல்லாட்சி, வெளிப்படைத்தன்மையைக் குறிக்கும் கட்டமைப்பு மற்றும் நீடித்த சீர்திருத்தங்கள் முக்கியமானவை எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தலை ஒத்திவைக்க சிபாரிசு செய்யவில்லை

### சர்வதேச நாணய நிதியம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடவில்லை என்றும் இலங்கையில் தேர்தலை ஒத்திவைக்க சிபாரிசு செய்யவில்லை என்றும்... 02 பக்கம்

## நாணய நிதிய ஒப்பந்தக் கொள்கைத் திட்ட நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும்

### அரசியல் கட்சிகளை தனித்தனியாக சபையில் சமர்ப்பிக்கக் கோருகிறார் அமைச்சர் பந்துல



நா.தினுஷா

நாணய நிதியத்துடன் எமது அரசாங்கத்தால் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தத்திலுள்ள கொள்கைத் திட்டங்கள் தொடர்பான நிலைப்பாடுகளை ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியாக பாராளுமன்றத்தில்... 02 பக்கம்

## தீர்மானித்த முறைப்படி ஆசிரிய இடமாற்றங்கள்

### கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த

ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒருதொகை ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதம் தபாலிடப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும்... 02 பக்கம்



## ஆங்கில மொழியில் சட்டக் கல்லூரி பரீட்சை வர்த்தமானி

### இரத்துச்செய்ய பாராளுமன்றம் தீர்மானம்

சட்டக்கல்லூரி பரீட்சைகளை ஆங்கில மொழியில் மாத்திரம் நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல்... 02 பக்கம்

## எரிபொருள் விலைகள் அடுத்த மாதம் குறையும்




### அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்

எரிபொருளின் விலைகள் அடுத்த மாதம் குறைக்கப்படும் எனவும் அதன்பின், டிசம்பரில் மின்கட்டணம் குறைக்கப்படும் என்றும் மின் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (21).... 02 பக்கம்

## முருகைக்கல் அகழ்வால் காணாமல்போகும் அச்சத்தில் பூநகரி பொன்னாவெளி கிராமம்

நா.தினுஷா

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் பொன்னாவெளி பிரதேசத்தில் தனியார் சீமெந்து நிறுவனமொன்றுக்காக 300 அடி ஆழத்திலிருந்து முருகைக்கற்களை தோண்டி எடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால், அந்தக் கிராமமே இலங்கை வரைபடத்திலிருந்து இல்லாமல்போகும் அச்ச நிலை உருவாகியுள்ளதாக... 02 பக்கம்

# மதமாற்றத்துக்கு எதிராக கிழக்கு இந்து மத குருமார் அமைதிவழி ஆர்ப்பாட்டம்

(கல்லடி செய்தியாளர்)




இந்து மதத்தையும் தெய்வங்களையும் இழிவுபடுத்தும் விதமாக கிறிஸ்தவ சம்மேளனத்தினர் பிரதேசமெங்கிலும் சமூக வலைத்தளங்களிலும் மிகவும் கீழ்த்தனமான முறையில் பதிவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, எமது பிரதேசங்களிலே கட்டாய மதமாற்றம் என்பது மிகவும் பூதாகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது நாட்டில் மத சுதந்திரம் அனைவருக்கும் இருந்தாலும் கூட, பிற மதத்தைப் பூசிப்பதோ, இழிவுபடுத்துவதோ அன்றி தங்களுடைய மதத்தை வளர்த்தெடுப்பதில் யாரும் குறுக்கிட முடியாது என இந்து குருமார் ஒன்றியத் தலைவர் க.லோகநாதக்குருக்கள் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் மதமாற்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் காந்திப் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபிக்கருகில் செவ்வாய்க்கிழமை (21) ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. பேரணியின் இறுதியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்து மதத்தினர் பிற மதக் கடவுளரை பூசித்தோ, விமர்சித்தோ எமது சைவ சமயத்தை வளர்த்தெடுத்ததாக இதுவரை எந்த வரலாறும் இல்லை. அப்படியிருக்கும் போது எமது மதத்தையும் தெய்வங்களையும் மத போதகர்கள் என்ற போர்வையில் எமது மக்களின் மனங்களைச் சுக்குநூறாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் மதங்களுக் கிடையே இன முறுகலைத் தோற்றுவித்து விடும். இதனை எமது கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏனென்றால் நாங்கள் எவரையும் சீண்டுபவர்கள் அல்ல. எமது மதத்தை யார் இழிவுபடுத்தினாலும் அவர்களுக்கெதிராக நாங்கள் முன்னின்று சகல முயற்சிகளையும் மேற்கொண்டு அவர்களுக்கெதிராக போராடுவதை எவராலும் தடுக்க முடியாது. ஏனென்றால் மத சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. எமது ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் யாரும் செயற்படக் கூடாது என்பதோடு, அவரவர் மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலே தங்களது மதத்தை வளர்த்தெடுப்பதற்கு நாங்கள் தடையாக இருக்கப்போவதில்லை என்றார். இவ் அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான இந்துக் குருமார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், ரெலிகொம் பங்குகளை விற்க கெபினெட் அனுமதி

அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பி.எல்.சி. மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் பி.எல்.சி. என்பவற்றின் பங்குகளை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்கூறப்பட்ட இரு நிறுவனங்களிலும் பங்குகளை விற்பதற்கு அமைச்சரவை கொள்கை ரீதியில் அனுமதி வழங்கியுள்ளதாக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பி.எல்.சி. மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் பி.எல்.சி. ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளுக்கு திறைசேரி செயலாளர் அறிவித்துள்ளார்.

இது குறித்து இவ்விரு நிறுவனங்களும் கொழும்பு பங்கு சந்தைக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பங்கு உரிமை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி செயலாளரிடமுள்ளதோடு, அவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு சொந்தமான வர்த்தக மறுசீரமைப்பு பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளில் 49.50 சதவீத பங்கு உரிமை திறைசேரியிடமும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் நிறுவனத்தின் 51.34 சதவீத பங்கு உரிமை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக மகிழ்ச்சி அறிக்கையில் இலங்கைக்கு 112 ஆவது இடம்

உலக மகிழ்ச்சி அறிக்கை 2023இன் படி, இலங்கை 112ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் தொடர்ந்தும் ஆறாவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான முதல் இடமாக பின்லாந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, இலங்கையின் நிலை 2022இல் 127ஆவது இடத்தில் இருந்ததை விட மேம்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள மகிழ்ச்சியான இடங்களைக் கண்டறிய, ஆராய்ச்சியாளர்கள் ஆறு முக்கிய காரணிகளை பகுப்பாய்வு செய்தனர். சமூக ஆதரவு, வருமானம், ஆரோக்கியம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இல்லாமை என்பனவே அவையாகும்.

நெருக்கடிகள் இருந்தபோதிலும், உலகளாவிய வாழ்க்கை திருப்தி தொற்றுநோய்க்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைப் போலவே இருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஏரிகள் மற்றும் முடிவில்லா காடுகளுடன் அமையப்பெற்றுள்ள வடதுருவ நாடான பின்லாந்து, அதன் விரிவான நலன்புரி அமைப்பு, அதிகாரிகள் மீது அதிக நம்பிக்கை மற்றும் அதன் 5.5 மில்லியன் மக்களிடையே குறைந்த அளவிலான சமத்துவமின்மை ஆகியவற்றிற்காக தொடர்ந்தும் முதல் இடத்தை பெற்று வருகிறது. யுக்ரைனின் மகிழ்ச்சித் தரவரிசை இந்த ஆண்டு 98இல் இருந்து 92க்கு முன்னேறியது, ரஷ்ய படையெடுப்பு இருந்தபோதிலும் இது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மகிழ்ச்சி தரப்பட்டியலில் டென்மார்க் இரண்டாவது இடத்திலும் ஐஸ்லாந்து மூன்றாம் இடத்திலும் இஸ்ரேல் நான்காவது இடத்திலும் உள்ளன.

2020 முதல் அட்டவணையில் அடிமட்ட இடத்தை ஆப்கானிஸ்தான் பெற்றுள்ளது. இந்த தரவரிசையில் அண்டை நாடான இந்தியா 126ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 108ஆவது இடத்திலும் உள்ளன.

## நாணய நிதிய...

முன்வைக்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் அதற்கான வாக்கெடுப்பொன்றை நடத்துவது ஏற்புடையதாக இருக்குமென்றும் அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களிடமிருந்து எதனையும் மூடி மறைக்கவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் சகல விடயங்களையும் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார். நாட்டில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் எதிர்வரும் 48 மாத காலப்பகுதியில், நாணய நிதியத்திடம் ஒப்புக்கொண்ட சகல விடயங்களையும் அமுல்படுத்தியே ஆகவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் உலகத்துடனான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

நாணய நிதியத்துடன் எமது அரசாங்கத்தால் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தத்திலுள்ள கொள்கைத் திட்டங்களுக்கு இணக்கமா, இணக்கம் இல்லையா என்பதை அறிவித்து, இணக்கம் இல்லை என்றால் அதற்கான காரணங்களையும் மாற்று தீர்வுகளையும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தனித்தனியாக பாராளுமன்றத்தில் முன்வைத்தால் சிறப்பாக இருக்குமென கருதுகிறேன். அதற்கான வாக்கெடுப்பொன்றை நடத்துவதும் ஏற்புடையதாக இருக்குமென்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

இதற்கு முதல் 16 தடவைகள் நாணய நிதியத்தை ஏமாற்றியுள்ளோம். ஒப்புக்கொண்ட வாக்குறுதிகளை நாட்டில் நிறைவேற்றவில்லை. இம்முறையும் அவற்றை நிறைவேற்றாவிட்டால் இதனைவிட பாரதூரமான நெருக்கடியை சந்திக்க நேரிடும். அதனால், அரசியல் கொள்கைகளுக்கு அப்பால், நாடு தொடர்பில் தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனூடாக எமது நாட்டின் மீதான நம்பிக்கைத் தன்மை அதிகரிக்கும். நாட்டின் கடன் தொடர்பான இணக்கப்பாடு இன்னும் ஏற்படவில்லை. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான கலந்துரையாடல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரை நிதி நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ளுதல், அபிவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தொழில்துறைசார் மறுசீரமைப்புகள் உள்ளிட்ட நோக்கங்களுக்காகவே இந்த நிதி வழங்கப்படுகின்றது.

இதனூடாக ஏற்படும் நம்பிக்கையினூடாக இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி கடன்கள் என்பன மீளவும் வழங்கப்படும். உதாரணமாக குறிப்பிடுவதனால், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு ஏனைய நாடுகளால் வழங்கப்பட்ட கடன்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், வீதி அபிவிருத்திகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த கலந்துரையாடலுடன் இடைநிறுத்தப்பட்ட சகல கடன் உதவிகளையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

உலக வங்கி, நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஏனைய நாடுகளினூடாக கிடைக்கப்பெறும் இருதரப்பு உதவிகள் என சகலவற்றினூடாகவும், இவ்வருடத்தின் இறுதியில் 7 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை தேடிக்கொள்ளக்கூடியதாக இருக்குமென சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அறிவித்திருக்கிறார்கள். நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு சகலரும் ஒத்துழைத்தால் இந்த நிலைமையிலிருந்து எம்மால் விரைவாக மீளெழ முடியும். ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் மேலும் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றார்.

## முருகைக்கல்...

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று (21) சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் சுட்டிக்காட்டுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் பொன்னாவெளி பிரதேசம் என்பது பாரம்பரியமான கிராமமாகும். இந்த பொன்னாவெளி கிராமம் 3,500 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக தமிழர்கள் வாழ்ந்துவரும் ஒரு கிராமமாக இருந்துவருகிறது. அவர்கள் அங்கு வந்து குடியேறியவர்கள் இல்லை. அங்கேயே தோன்றியவர்கள். அவ்விடத்திலேயே, கௌதாரி முனை, பொன்னாவெளி, வேரவில், பூநகரி, ஈழவூர், புளியந்தரை, நாகதேவன்துறை என்று கூறப்படும் பாரிய பாரம்பரிய பிரதேசங்களை உள்ளடக்கிய பூநகரி என்பது தமிழர்கள் தோன்றி வாழ்ந்த சரித்திரமான வரலாற்று இடங்களை கொண்ட ஒரு பிரதேசமாகும்.

இவற்றில் பொன்னாவெளி எனும் கிராமம் இலங்கை வரைபடத்திலிருந்து காணமல் போகும் நிலையை சந்தித்துள்ளது. தனியார் சீமெந்து நிறுவனமொன்றுக்காக அந்த பிரதேசத்தில் இருக்கும் முருகைக்கற்களை எடுப்பதற்காக, ஒரு மைல் தூரத்திலிருக்கும் கடல் நீரையும் பொருட்படுத்தாமல், 300 அடி ஆழம் வரை தோண்டி எடுத்து பொன்னாவெளி கிராமத்தையே கடலாக்கின்ற ஒரு பெரிய கைங்கரியம் நாட்டில் நடைபெறுகிறது. இதுவொரு மோசமான செயற்பாடாகும்.

முக்கியமாக, கிளிநொச்சியிலுள்ள தொன்மை மிகு பேரூர்களில் ஒன்றாக இருக்கும் வேரவில் கிராமம், ஈழவூர் என்றும், புளியந்தரை என்றும் சிறப்பித்து சொல்லும் அளவுக்கு முக்கியத்துவமிக்க அடையாளமாக விளங்குகின்றது. கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, மொட்டையன் குளம், பிருந்தாவனம், வலைப்பாடு, தொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் சூழவுள்ள இந்த பிரதேசத்தில் 1,156 குடும்பங்களைச் சேர்ந்த 4,276 இற்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடற்புற சூழலியல் கொண்ட இந்த பிரதேச மக்கள் மிக நீண்டகாலமாக குடி நீர் பிரச்சினையையும் சந்தித்து வருகிறார்கள். இந்நிலையில், தமது பிரதேசத்தில் புதிதாக சீமெந்து தொழிற்சாலையொன்று அமைக்கப்படுமாயின் அது தமது இருப்பை கேள்விக்குறியாக்கும் என்ற அச்சத்திலும், அதுபற்றிய தெளிவுபடுத்தலை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலும் இருக்கிறார்கள். அங்கிருக்கும் கற்களையும், நீரையும் பரிசோதனைக்கு உட்படுத்துவதாக தெரிவித்து கடந்த வருடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த பிரச்சினை தொடர்பில் வினவியபோது எங்களுக்கும் இதற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்றார்கள். இங்கு எதுவும் நடக்காது என்றார்கள். ஆனால், இன்று அந்த பிரதேசத்தில் மக்கள் குடியிருக்க முடியாதவாறும் அங்குள்ள மக்களை கலைக்கக்கூடிய மிகப்பெரிய அபாயகரமான சூழலும் உருவாகியிருக்கிறது. இதுவரையில், எந்தவொரு தெளிவுபடுத்தலும் வழங்கப்படவில்லை என்றார்.

## ஆங்கில மொழியில்...

112 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆதரவாக 113 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் பதிவாகியிருந்தன.

இந்த வர்த்தமானி மீது வாக்கெடுப்பு தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அதன்படி வாக்கெடுப்பு நடைபெற்றது. காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி மாத்திரம் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்.

## பணவீக்கத்தை...

இலங்கை பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் தனது நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையை பேணுவதற்கு பலமுனை பணவீக்க உத்தி குறித்து அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடும் பொருளாதார சமூக சவால்களை எதிர்கொண்டுள்ளது உயர் பணவீக்கத்துக்கு மத்தியில் கடும் மந்தநிலை காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர் குறைந்துபோயுள்ள வெளிநாட்டு நாணய கையிருப்பு நீடித்து நிலைக்க முடியாத பொதுகடன் நிதித்துறை பலவீனங்கள் அதிகரித்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்தாபனங்களையும் அரசகட்டமைப்பு களையும் ஆழமான சீர்திருத்தங்களிற்கு உட்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ள அவர் இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீர்திருத்தங்களை விரைவாகவும் உரிய நேரத்திலும் முன்னெடுப்பது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீர்திருத்தங்களிற்கான வலுவான உரிமையை கையிலெடுப்பது முக்கியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள்...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"மசகு எண்ணெய் விலை குறைந்து வருகிறது. மேலும் ரூபாவின் மதிப்பும் வலுவடைந்து வருகிறது. எரிபொருள் விலையில் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி எனக்கு ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளார். நாங்கள் அந்த சலுகைகளை வழங்குகிறோம்.

சாலைகளில் போராட்டம் நடத்தி மின்சாரத்தை துண்டிக்கும்போது, முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வர மாட்டார்கள். சில அரசியல் கட்சிகள் அதைச் செய்கின்றன.

அரசியல் கட்சிகள் வழிநடத்தும் தொழிற்சங்கங்கள் உள்ளன. சிலர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தோன்றியுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பணம் வரும்போது, அவர்களின் முழக்கங்களில் ஒன்று தொலைந்து போகிறது. எரிபொருள் விலை குறையும் போது மற்றொரு கோஷம் இழக்கப்படுகிறது. பொருட்களின் விலை குறையும்போது மற்றொரு முழக்கம் மறைந்து விடுகிறது'' என்றார்.

## கடனை இலங்கைக்கு...

நிதித்துறையின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், பொருளாதார வளர்ச்சி மற்றும் மறுசீரமைப்பிற்கான இயலுமையை வலுப்படுத்தல் போன்றவை இந்த திட்டத்தின் இலக்குகளாகும்.

இலங்கைக்கான கடனுதவிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு வழங்கியுள்ள அங்கீகாரமானது, ஏனைய அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்து நிதியியல் ஒத்துழைப்புகள் கிடைப்பதற்கான வாய்ப்பினையும் உருவாக்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியுதவியை இலங்கை பெற இத்திட்டம் உதவும். ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தின் பல் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், கடன் நிலைத்தன்மையை அடையவும் அரசாங்கம் முயற்சித்து வரும் இலங்கைக்கு இது ஒரு வரலாற்று மைல்கல்லாக அமைகிறது. இந்த மாத தொடக்கத்தில், சர்வதேச நாணய நிதியத்திற்கு அமைவாக இலங்கைக்கு பெரிஸ் கழகம், சீனா, இந்தியா உள்ளிட்ட அதன் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் நிதி உத்தரவாதம் கிடைத்தது. சர்வதேச நாணய நிதியத்திற்கு செயற்குழுவைக் கூட்டி இலங்கையின் கடனுக்கான கோரிக்கையை பரிசீலிக்கும் வகையில் இந்த அனுமதி கிடைத்தது. முன்னெப்போதும் இல்லாத சவால்களில் இருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கும், அனைத்து பங்குதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான ஏற்பாடுகள் இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

***இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் வெளியிட்ட அறிவிப்பு***

"இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களில் எமது பொருளாதார எதிர்காலத்திற்கு இதனை விட மிகவும் நெருக்கடியான காலகட்டம் இருந்ததில்லை. எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான மற்றும் சாதகமான செயற்பாடுகளைத் தொடர்ந்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல் தரப்பு அமைப்புகளிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்கு பெறும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவினால் எமது திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஆரம்பத்திலிருந்தே, நிதி நிறுவனங்களுடனும் எங்கள் கடன் வழங்குபவர்களுடனும் நாங்கள் நடத்திய அனைத்து பேச்சுவார்த்தைகளும் முழு வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன. தூர நோக்கான பொருளாதாரக் கொள்கை மற்றும் எமது இலட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மூலம் பொருளாதாரம் நீண்ட கால மீட்சியை எதிர்பார்க்கும். இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவிற்கும் நன்றி. "கடந்த ஜூலை மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, நிலையான கடன் நிலையை அடைவதே எனது முன்னுரிமையாக இருந்தது. அதற்காக சில கடினமான முடிவுகளை எடுத்தோம். ஆனால், நமது சமூக பாதுகாப்பு வலையமைப்பை விரிவுபடுத்தவும், பாதிக்கப்படக்கூடிய தரப்பினர்களை பாதுகாக்கவும், ஊழலை முற்றாக ஒழிக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய, சர்வதேச அளவில் கவர்ச்சிகரமான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை உறுதி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். நமது நாட்டிற்கான இந்த நோக்கை அடைவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் மிகவும் முக்கியமானது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். எங்களின் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் நாங்கள் தொடர்ந்து தொடர்புபட்டிருக்கிறோம். மேலும் எங்கள் பணி முன்னோக்கிச் செல்லும் சூழலில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் எமது கடன் வழங்குநர்களை ஊக்குவிக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கும் இன்றியமையாததாக இருக்கும். மேலும் முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் திறமைகளுக்கு இலங்கை ஒரு ஈர்ப்புள்ள நாடு என்பதை மீண்டும் நிரூபிக்கும்.

## தீர்மானித்த...

உயர்தரப் பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்ற கடிதம் சில மாதங்களில் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் இடமாற்றத்தில் தன்னிச்சையான எந்த செயலும் இடம்பெறவில்லை. இடமாற்றங்கள் தீர்மானித்தபடியே வழங்கப்படுகின்றன.

2020, 2021, 2022 ஆகிய மூன்று வருடங்களிலும் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. அதனால் கடந்த வருடமளவில் 14ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளன.

அதற்கான இடமாற்ற சபையொன்று நடைமுறையில் உள்ளது. அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினரும் அந்த சபையில் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில் இரண்டு விதமாக ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று சாதாரணமாக கோரப்படும் இடமாற்றம். நீண்ட காலமாக கஷ்டப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுபவர்களும் இதில் உள்ளடங்குவர்.

மற்றது 2017ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டது.

அந்த வகையில், 10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதை அடிப்படையாக வைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டில் இருந்தே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் கடந்த மூன்று வருடங்களில் கொரோனா சூழ்நிலை காரணமாக இடம்பெறாததால் அனைத்தையும் ஒன்றாக தற்போது எடுத்துள்ளோம். அந்த வகையில் மொத்தமாக 8ஆயிரத்து 893 இடமாற்றங்களுக்கான அனுமதி இடமாற்ற சபை மூலம் கிடைத்துள்ளது.

இதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் 681 பேர் அடங்குகின்றனர். அதில் 388 பேருக்கான இடமாற்ற கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளன. மீதமானவை உடனடியாகவே தபாலில் இடப்படும்.

சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் பத்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் சேவையாற்றி கட்டாய இடமாற்றத்திற்காக இருப்பவர்கள். எனினும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும் இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களும் எதிர்வரும் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இடம் பெறவுள்ளதால் மாணவர்களின் நன்மை கருதி அந்த இடமாற்றத்தை அதன் பிறகு மேற்கொள்ள மேன்முறையீடு மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதனால் அது தொடர்பான விடயம் ஆலோசனை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவ்வாறு சம்பந்தப்படும் ஆசிரியர்களுக்கு ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் இடமாற்றம் வழங்கவும் ஏனைய ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, பாடசாலை விடுமுறை முடிவடைந்ததும் ஏப்ரல் மாதத்தில் இணைவதற்கான கடிதம் அனுப்பப்படும். எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணப்பட்டு விட்டது என்றார்.

## தேர்தலை...

சர்வதேச நாணய நிதியம் நேற்று (21) தெரிவித்துள்ளது. ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அதிகாரி மசாஹிரோ நோசாக்கி, அடுத்த இரண்டு நாட்களில் கடனின் முதல் தவணை விடுவிக்கப்படும் என்று கூறினார்.

கொடுப்பனவுகளை ரூபாவாக மாற்றி அரசாங்க கடன்கள் மற்றும் இதர செலவினங்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

## இலங்கை இனியும்...

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (21) ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை, அதிகரித்துக் கொள்வதுடன், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளை அரசாங்கம் படிப்படியாக நீக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இரு தலைவர்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இனிமேல் இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது தொடர்பான உடன்படிக்கை இன்று (22) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச நாணய நிதிய கொடுக்கல் வாங்கலை வெற்றிகரமாக நிறைவுசெய்த ஜனாதிபதிக்கு நன்றி

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



எதிரணிகளின் அரசியல் விமர்சனங்கள் மற்றும் போராட்டங்களுக்கு மத்தியிலும், சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கலை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றிகள் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன் வசதி வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அனுமதி வழங்கியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"வங்குரோத்து நிலையை அடைந்த எமது நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைவிட வேறுவழி இருக்கவில்லை. அதனால்தான் பொருளாதார மறுசீரமைப்புகள்கூட செய்யப்பட்டன.

இதற்கு முன்னரும் 16 தடவைகள் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. எனினும், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இம்முறை கடனுக்கான அனுமதியைப் பெறுவது பெரும் சவாலாக அமைந்தது. இதற்கிடையில் சர்வதேச நிதி நிறுவனங்களும் தரவு பட்டியலில் இலங்கையை பின்னிலைப்படுத்தின.

இந்நிலையில்தான் இராஜதந்திர மட்டத்திலான நகர்வுகளைக் கையாண்டு இந்தியா, சீனா, ஜப்பான், பரிஸ் க்ளப் உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்போடு சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார்.

இனி இலங்கையால் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியும். நிதி நிறுவனங்களும் இலங்கை மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்.

அந்தவகையில் ஜனாதிபதிக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானிகளுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கும் நன்றிகள் - என்றார்.

# தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல்செய்த 3000 அரச ஊழியர்களின் ஊதியத்தை மீள வழங்க ஆலோசனை



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல்செய்த 3,000 அரச ஊழியர்களின் சம்பளத்தை மீள வழங்குவது தொடர்பில் சட்ட மா அதிபரிடம் கேட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர நேற்று (21) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்ததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் டலஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவங்ச ஆகியோர் கேள்வி எழுப்பியபோதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை அறிவித்துள்ளது. அதில்தான் பிரச்சினை இருக்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த 3,000 அரச ஊழியர்களின் சம்பளத்தை மீள வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். ஏனென்றால், அந்தக் குழுவில் எங்களில் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள் எங்களிடம் கேள்வி எழுப்புகிறார்கள். அரசியல் செய்யமாட்டோமென ஒப்புதல் எடுக்கப்பட்டு, அவர்களை வேறு பிரதேசங்களுக்கு மாற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# செயலிழந்த மின்பிறப்பாக்கியை மீள செயற்படுத்துவதற்கு 12 நாட்கள் தேவை

## இலங்கை மின்சார சபை

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் செயலிழந்துள்ள மூன்றாவது மின்பிறப்பாக்கியை மீள செயற்படுத்துவதற்கு 12 நாட்களாகுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இயந்திரத்தின் கொதிகலனிலுள்ள நீர்க்குழாய் வெடித்தமையால், மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன குறிப்பிட்டார்.

குறித்த மின்பிறப்பாக்கி மிகவும் சூடாக இருப்பதால், அதனை பழுதுபார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மூன்றாவது மின்பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையின் கையிருப்பிலுள்ள டீசல் உள்ளிட்ட எரிபொருட்களைப் பயன்படுத்தி, மக்களுக்கு தொடர்ந்தும் மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# மொரட்டுவ குடு ரெஜினா கைது

போதைப்பொருள் வர்த்தகரான 'மொரட்டுவ குடு ரெஜினா' பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று (21) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இரத்மலானை, கல்கிஸை, மொரட்டுவ பிரதேசங்களில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் ரத்மலானே தேவிந்தவின் போதைப்பொருள் கும்பலுக்கு 'மொரட்டுவ குடு ரெஜினா' உதவியாக இருந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மொரட்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மொரட்டுவெல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே 49 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 5.25 கிராம் ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# வீதியில் கிடந்த பணப்பையை உரிமையாளரிடம் கையளித்த பெண் கான்ஸ்டபிள்



(பலாங்கொடை மேலதிக நிருபர்)

வீதியில் விழுந்து கிடந்த பணப்பையை உரிமையாளரைக் கண்டறிந்து அவரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

டெங்குக் கட்டுப்பாட்டுக் கடமைக்காக சென்றுகொண்டிருந்த கே.பிரசாந்தி என்ற பெண் கான்ஸ்டபிள் பலாங்கொடை தும்பகொடைப் பகுதியில் இப்பணப்பையை கண்டெடுத்துள்ளார். இதன் உரிமையாளர் பலாங்கொட ஹந்தகிரிய பகுதியில் வசிக்கும் சுமித்ரா மல்காந்தி என்ற பெண் என அடையாளம் காணப்பட்ட பின் அப்பணப்பையில் இருந்த பத்தாயிரத்து 80 ரூபா பணம் மற்றும் முக்கியமான ஆவணங்களை நேற்று பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் வைத்து அவரிடம் கையளித்தார்.

# 159ஆவது பொலிஸ் வீரர் தினம்




159 வருட பொலிஸ் வீரர் தினம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

1864.03.21 அன்று - இதேநாளில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான சபான் என்பவரை நினைவுகூரும் வகையில் குறித்த நிகழ்வு நேற்று (21) பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கலந்து கொண்டு திணைக்கள கொடியை ஏற்றி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டார்.

தொடர்ந்து, உயிரிழந்த அத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் இடம்பெற்றதுடன், பூச்செண்டுகள் வைக்கப்பட்டு நினைவுகூரப்பட்டது.

# ரமழான் தலைப்பிறையை தீர்மானிக்க கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மாநாடு




ஹிஜ்ரி 1444 புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு இன்று (22) இடம்பெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு உறுப்பினர்கள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யத்துல உலமா சபையின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நிதியமைச்சின் செயலருக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்




நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் ரஞ்சித் மத்தும பண்டாரவால் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்குத் தேவையான நிதியை முடக்கிவைத்திருப்பதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற நிதியமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு, விஜித ஹேரத்தினால் மற்றுமொரு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்றிட்டத்துக்கு அனுமதியளித்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் நேற்று (21) பல்வேறு இடங்களிலும் பட்டாசு கொளுத்தி, தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 08ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** மன உளைச்சல் இருக்கும், செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள். ஞாபக மறதி.

**ரிஷபம்:** வீண் மனக்கவலைகள் வேண்டாம், எல்லாம் நல்லதற்கே என்று நினைத்து அமைதி கொள்க.

**மிதுனம்:** உடல் மனம் அமைதியாக இருக்கும், நினைத்ததை இன்று சாதிப்பீர்கள். தன வரவு உண்டு.

**கடகம்:** பயணங்கள் அதிகரிக்கும், உடல் நோய்களைப் பார்த்துக்கொள்ளுங்கள், தொழிலில் சாமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** மௌனம் காப்பது அவசியம், எப்படித்தான் மகிழ்ச்சி அமைந்தாலும் நீங்களே உங்கள் மனதை கெடுத்துக் கொள்வீர்கள்

**கன்னி:** சுப செய்திகளால் மன மகிழ்ச்சி அடைவீர்கள், கடவுள் வழிபாட்டில் மனதை செலுத்துவீர்கள்.

**துலாம்:** காதல் சுற்றுலா செல்லுவீர்கள், ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள், பெண்கள் உதவுவார்கள்.

**விருச்சகம்:** வீண் டென்ஷன் வேண்டாம், கோபங்களை அடக்கிக்கொள்ளப் பாருங்கள், உடல் அசதி.

**தனுசு:** தெளிந்த மனதுடன் இன்று அனைத்தையும் சாதிப்பீர்கள், குழந்தைகளால் நன்மையும் புகழும் உண்டு.

**மகரம்:** நீங்கள் நினைத்த பயணத்தால் மகிழ்ச்சியும் லாபமும் அடைவீர்கள், தாய் அன்பில் திளைப்பீர்கள்.

**கும்பம்:** சதோதர உறவால் நன்மை உண்டு, தைரியத்துடன் சவால்களை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** ஞாபக மறதியால் அவதிப்படுவீர்கள், மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அலைபாய்ந்த வண்ணமிருக்கும்.

**திதி** : பிரதமை பி.ப. 8.21வரை பின் துவிதியை

**நட்சத்திரம்** : உத்தரட்டாதி பி.ப.3.32 வரை பின் ரேவதி

**யோகம்** : சித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 9.14 – 10.14 மணி வரை

**ராகு காலம்** : 12.14 – 1.44 மணி வரை

**எமகண்டம்** : 7.44 – 9.14 மணி வரை

**குளிகை** : 10.44 – 12.14 மணி வரை

**சந்திராஷ்டமம்** : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : புனர்பூசம்,விசாகம், பூரட்டாதி(பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : வசந்த நவராத்திரி ஆரம்பம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# ஹஜ் விடயங்களைக் கவனிக்க முதன்முறையாக தனியானதொரு ஹஜ் விவகார அலுவலகம் திறப்பு





(அஷ்ரப் ஏ சமத்)

ஹஜ் விடயங்களைக் கவனிப்பதற்காக முதன்முறையாக தனியானதொரு ஹஜ் விவகார அலுவலகமொன்று கொழும்பு 10இல் உள்ள முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் முதலாம் மாடியில் நேற்று (21) பௌத்த விவகார மத விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வை முஸ்லிம் சமய பண்பாட்டுத் திணைக்களமும் ஹஜ் கமிட்டி மற்றும் ஹஜ்முகவர்கள் சங்கத்தின் தலைவர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசீம், முசாரப், மர்ஜான் பழீல். இசாக் ரஹ்மான், ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்றாஹீம் அன்ஸார், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.ஏ.எம்.பைசல் ஹஜ் கமிட்டியின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

இலங்கை முதற்தடவையாக ஹஜ் விவகாரங்களுக்காக திணைக்களத்தில் அலுவலகமொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களது ஐம்பெரும் கடமையான ஹஜ் யாத்திரிகைக்காக கடந்த காலங்களில் முகவர்கள் ஊடாக பல்வேறு குளறுபடிகள் இருந்தன. இலங்கைக்கு கிடைக்கும் விசாக்கள் பல இலட்சங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. அவ்வாறான குளறுபடிகளை தடுப்பதற்காகவே இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இம்முறை இலங்கை முஸ்லிம்களுக்காக 3,500 விசாக்கள் கிடைக்குமென நம்புகின்றேன். கடந்த 2 வருடங்சகளாக கொவிட் தொற்று காரணமாக ஹஜ் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை - என்றார்.

அத்துடன், இந்நிகழ்வின்போது சவூதி அரேபியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பேரீச்சம்பழப் பொதியொன்றும் கெசல்வத்தை பள்ளிவாசல் தலைவரிடம் அமைச்சரினால் கையளிக்கப்பட்டது.

# ஆசிரியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று!

ஆசிரியர்களின் இடமாற்ற சபை மற்றும் இடமாற்றம் என்பவற்றை ஜனாதிபதி இரத்துச்செய்தமை, ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிச்சையான தீர்மானங்களை எடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று (22) கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கத் தலைவர் யல்வல பஞ்ஞாசேகர தேரர் தெரிவித்தார்.

இதன்போது, கோட்டை புகையிரத நிலையத்தின் அருகிலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை எதிர்ப்புப் பேரணியாக செல்லவும் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று (21) கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களின் இடமாற்ற சபை மற்றும் இடமாற்றம் என்பவற்றை ஜனாதிபதி இரத்துச்செய்துள்ளார். இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு அமைச்சின் செயலாளர், இடமாற்றச் சபை மற்றும் தொழிற்சங்கங்களுக்கு நேற்று முன்தினம் (20) அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த விடயங்கள் குறித்து அதிகாரிகள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவே இதன்போது எங்களுக்கு அறியக் கிடைத்தது. அதற்கமைய, சகல முதல்நிலை இடமாற்றங்களையும் 27ஆம் திகதியாகும்போது கடமை ஏற்கும் வகையில் இடமாற்ற அனுமதியை வெளியிடவும், 6, 11, 12, 13 ஆகிய வகுப்புகளுக்குரிய வகுப்பு விடயப்பரப்புகள் ஜனாதிபதியின் வசமுள்ளதாகவும், அவர் தனக்கு ஏற்றவாறே இதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் கலந்துரையாடலில் எங்களுக்கு அறியக்கிடைத்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சகல ஆசிரியர் சங்கங்களுக்கும் கலந்துரையாடலிலிருந்து வெளியேறியிருந்தன. அதன்பின்னர், இதுபோன்ற தன்னிச்சையான, சட்ட விரோதமான இந்தச் செயற்பாட்டு எதிர்ப்பை வெளியிட நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இதற்கு முதற்காரணமாக இருந்த பிரதான பாடசாலைகளின் ஒருசில அதிபர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை (இன்று) கோட்டை புகையிரத நிலையத்தின் அருகிலிருந்து ஜனாதிபதி அலுவலகம் வரை நடைபயணமாகச் சென்று எதிர்ப்பை தெரிவிக்க தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

12 ஆயிரத்து 500 இடமாற்ற விண்ணப்பங்களில் 8,000 விண்ணப்பங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஆயிரம் இடமாற்றங்கள் முதல்நிலை பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், மிகுதி 7000 பேர் மீது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வாறு பாரபட்சம் காட்டப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்- என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, மார்ச் 22ஆம் திகதி, புதன்கிழமை

# பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வு தேவை!

இலங்கையின் பிணை எடுப்புப் பொதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரம் வழங்கியதை அடுத்து, படிப்படியாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை இலங்கை நீக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

"நேற்று, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியை அங்கீகரித்தது. அந்த ஒப்புதல் இலங்கைக்கு அதன் கடனை மறுசீரமைக்க வலிமையுள்ளது என்பதற்கான சமிக்ஞையை அனுப்புகிறது. இலங்கை ஒரு திவாலான நாடாக இனியும் கருதப்படாது" என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நாட்டின் கையிருப்பு மேம்படுத்தப்படும் என்றும், இதனால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

"சுற்றுலாத்துறைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் இதர பொருட்கள் அந்த செயல்முறையின் முதல் கட்டமாக அமுல்படுத்தப்படும்'' எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் செலவுகளையும் கடன் பொறுப்புகளையும் கருத்தில் கொள்ளும்போது, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவிருக்கும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை, நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க போதிய தொகையல்ல. அத்தொகை நான்கு வருடங்களுக்குள் படிப்படியாகவே கிடைக்கும். அதன் இவ்வருட தவணைத்தொகை, சுமார் 360 மில்லியன் டொலர் எனக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் இந்தியா வழங்கிய கடன் தொகை மட்டும் மூன்று பில்லியன் டொலருக்கும் மேலாகும். இலங்கை இதுவரை பெற்ற கடனுக்காக, வருடமொன்றுக்கு 67 பில்லியன் டொலரை திருப்பிச் செலுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார். வருடமொன்றுக்கு இலங்கை, சுமார் ஆறு பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெயை இறக்குமதி செய்கிறது. நான்கு பில்லியன் டொலர் பெறுமதியான உரத்தை இறக்குமதி செய்கிறது. நாணய நிதியத்தின் உதவித்தொகை எவ்வளவு சிறியது என்பது, அதன் மூலம் தெரிகிறது.

நாணய நிதியத்தின் இந்த நிதித்தொகை உண்மையான உதவியல்ல. பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு, வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கைக்கு, அதன் உத்தரவாதத்தில் மேலும் கடன் வழங்கவும் வழங்கிய கடன்களை மறுசீரமைக்கவும் இனி வெளிநாடுகள் முன்வருவதே உண்மையான உதவியாகும்.

அரசாங்கத்தின் தலைவர்களிடம் சரியான திட்டம் இருந்தால், அதன் மூலம் நாட்டை பொருளாதார ரீதியில் வளம்பெறச் செய்ய முடியும். இலங்கைக்கான தமது உதவித்திட்டத்தை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்தவுடன், இலங்கை உலக வங்கியிடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் ஜப்பானிடமும் மேலும் 3 பில்லியன் டொலரும், இந்தியாவிடம் 1 பில்லியன் டொலரும் கடனாகப் பெறுவதற்கு திட்டமிட்டிருக்கிறது. இதனால் ரூபாவின் பெறுமதி மேலும் குறையலாம்.

எனினும், இவை அனைத்தும் எதிர்காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களாகும். எனவே, இக்கடன்களைப் பயன்படுத்தி, பொருளாதார அபிவிருத்தித்திட்டமொன்றை அமுலாக்காவிட்டால் எதிர்காலத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பார்க்கிலும் மோசமான நெருக்கடிகளை சந்திக்க நேரும். அவ்வாறான திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு ஆறுதல் தரும் ஓர் ஏற்பாட்டை செய்தாலும் நிரந்தரமான பொருளாதாரத் தீர்வொன்றை நோக்கி நாட்டை அவர் நகர்த்துவது முக்கியமானது.

பொருளாதார நெருக்கடியையும், அரசியல் நெருக்கடியையும் சந்தித்து அவை இரண்டும் இணைந்து நாட்டில் நெருக்கடியை தோற்றுவித்தன. பொருளாதார நெருடிக்கடியையும், அரசியல் நெருக்கடியையும் தனித்தனியாக எடுத்து, தீர்த்து வைக்க முடியாது. அந்தப் பேரழிவிலிருந்து மீட்சி பெறுவதற்கென தெளிவான, உபாய ரீதியான ஒரு நோக்கு அவசியமாகும். அதற்கு திடசங்கற்பத்துடன், நிர்ணயகரமான ஓர் அரசியல் தலைமைத்துவம் தேவைப்படுவதுடன், சீர்திருத்தம் மற்றும் புத்துயிர்ப்பூட்டுதல் என்பன குறித்த தெளிவான ஒரு திட்டத்தின் முறையான கொள்கை பக்கபலம் அதற்கு இருக்கவேண்டும். வெளிப்படையாக சொல்வதாக இருந்தால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்பட்டிருக்கும் விதம், அந்தக் கொள்கையை உருவாக்கும் விடயத்தில் எந்தவொரு நகர்வையும் இதுவரையில் மேற்கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் இதனை கவனத்திற்கொள்ள வேண்டியது மிக அவசியமானது.

## தவக்கால சிந்தனை

### தந்தை சொற்படியே நான் தீர்ப்பிடுகிறேன்



அக்காலத்தில் இயேசு யூதர்களிடம், "என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்" என்றார். இவ்வாறு அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறியதோடு நில்லாமல், கடவுளைத் தம் சொந்தத் தந்தை என்று கூறித் தம்மையே கடவுளுக்கு இணையாக்கியதால் யூதர்கள் அவரைக் கொல்ல மிகுந்த முயற்சி செய்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்.

"மகன் தாமாக எதையும் செய்ய இயலாது. தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கிறார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தந்தை மகன் மேல் அன்புகொண்டு தாம் செய்யும் அனைத்தையும் அவருக்குக் காட்டுகிறார். இவற்றைவிடப் பெரிய செயல்களையும் அவருக்குக் காட்டுவார். நீங்களும் வியப்புறுவீர்கள். தந்தை இறந்தோரை எழுப்பி அவர்களை வாழ வைப்பதுபோல மகனும் தாம் விரும்பியவர்களை வாழ வைக்கிறார். தந்தை யாருக்கும் தீர்ப்பளிப்பதில்லை. தமக்கு எல்லாரும் மதிப்புக் கொடுப்பதுபோல மகனுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மகனுக்கு அளித்துள்ளார். மகனை மதியாதவர் அவரை அனுப்பிய தந்தையையும் மதிப்பதில்லை. என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்'' என்றார்.

# புதிய ஆணையைப் பெறுவது தவிர்க்கமுடியாத தேவை!



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் தற்போதைக்குப் பயனளிக்கும் அறிகுறிகளைக் காட்டுகின்றன. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கவிருக்கின்றது. இது தற்போதைய பொருளாதார இடர்பாடுகளை சமாளிக்கவும் வேறு கடன்களை பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கத்துக்கு உதவும். பழைய கடன்களையும் புதிய கடன்களையும் திருப்பிச்செலுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை உறுதிசெய்வதே சவாலாக அமையும். இதற்காக அரசாங்கம் அதன் புதிய வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.

இந்த வரிக்கொள்கைகள் இல்லாமலேயே விலைவாசி உயர்வின் காரணமாக ஏற்கெனவே வாழ்க்கையைச் சமாளிக்கமுடியாமல் இருந்த வருவாயை சம்பாதிப்போருக்கு கணிசமான வரிச்சுமையை அதிகரிக்கிறது. அரசாங்க சேவையாளர்களிலும் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களிலும் குறைப்புச் செய்வதற்கான அதன் திட்டங்கள் குறித்தும் அரசாங்கம் அறிகுறிகளைக் காட்டுகின்றது. இவை பட்ஜெட்டை சமநிலைப் படுத்துவதற்கு அவசியமான சீர்திருத்தங்களாக இருக்கலாம். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து அரசாங்கத்துக்கு இவை ஆதரவைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய சாத்தியமில்லை. சனத்தொகையில் 40 சதவீதமானோர் தினமும் 225 ரூபாவையும் விட குறைவான பணத்துடன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் நிலையில், பலர் வறுமைக்கோட்டின் கீழ் விழக்கூடிய ஆபத்து இருப்பதாக உலக வங்கி எச்சரிக்கை செய்திருக்கிறது.

பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் பொருளாதாரக் கொள்கைகள் மக்களின் வரவேற்பைப் பெறக்கூடியவையாக இல்லை என்பதே அரசாங்கத்தின் பிரச்சினையாகும். அந்த கொள்கைகள் அரசியல் ரீதியிலும் சிக்கலானவையாக இருக்கின்றன. கடந்த காலத்தை ஆராய்ந்து பார்க்கத் தவறுவது எமது தோல்விகள் அல்லது தவறுகளுக்கான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதில்லை. ஆட்சிமுறைமையை துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு அல்லது நேர்மையற்ற முறையில் சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தவிர்ப்பதும் உதவப்போவதில்லை. நிதி வளத்தைப் பொறுத்தவரை நாட்டை ஒப்பேறக்கூடியதாக்குவதற்கு முன்னெடுக்கப்படும் இந்த பொருளாதார மறுசீரமைப்பின் செலவுச்சுமை நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் அவர்களுக்கு கீழ் உள்ளவர்கள் மீதே விகிதப்பொருத்தமில்லாத அளவுக்கு கடுமையாக விழப்போகிறது.

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்து கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், நிலையான வருமானத்தைப் பெறுகின்றவர்களைப் பொறுத்தவரை உயர்ந்த மட்டங்களிலான வரிகளினால் இருமடங்கு சுமையை தாங்கவேண்டியவர்களாக இருப்பதால் அவர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். செலவு அதிகரிப்புகளை தங்களது வாடிக்கையாளர்கள் மீது சுமத்திவிடக்கூடிய நிலையில் இருக்கும் வர்த்தக சமூகத்தினர் மற்றும் சுயாதீனத்துறைசார் நிபுணத்துவ பிரிவினரைப் போலன்றி, இந்த நிலையான வருமானத்தைப் பெறும் பிரிவினர் வாழ்க்கைய சமாளிப்பதற்கு பெரும் சிரமப்படுகின்றனர். 12 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அல்லது சனத்தொகையில் ஐந்து சதவீதமானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக கடந்த வருடம் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதாக குடியகல்வு புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார இடர்ப்பாடுகள் பாரம்பரிய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் அமைப்புகளின் ஒன்றிணைந்த போராட்டங்களுக்கு வழிவகுத்திருக்கின்றன. தங்களுக்கு பாதிப்பாக அமையக்கூடிய முறையில் வருவாய்ப் பெருக்கத்தில் ஈடுபடும் அரசாங்கத்துக்கு எதிராக இவர்கள் போர்க்கொடி தூக்கியிருக்கிறர்கள். அடையாள வேலைநிறுத்தம் என்று வர்ணிக்கப்பட்ட கடந்த வார வேலைநிறுத்தம், இணக்கமான ஒரு பிரதிபலிப்பை வெளிப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் அளவுக்கு வெற்றிகரமானதாக அமைந்தது. ஜனாதிபதிக்கு நெருக்கமான அரசாங்க உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தியதைப் போன்று தொழில்களை இழக்கவேண்டிவரும் என்பது மாத்திரமல்ல, சொத்துகளும் சுவீகரிக்கப்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக பல ஊழியர்கள் வேலைக்கு வராமல் இருக்கவில்லை.

இதற்கு ஒரு முன்னுதாரணம் இருக்கிறது. 1980 ஜூலை வேலைநிறுத்தின்போது ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று அன்றைய அரசாங்கம் எச்சரித்தது. அந்த எச்சரிக்கையை நடைமுறைப்படுத்திய அரசாங்கம் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை வேலைநீக்கம் செய்தது. அந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பங்களும் பல வருடங்களாக பெரும் கஷ்டப்படவேண்டி ஏற்பட்டது. அன்றைய அரசாங்கம் மக்களின் ஆமோக ஆணையைக் கொண்ட ஒன்றாக இருந்த காரணத்தினால் சமூகத்தின் ஏனைய பிரிவினர் அடக்குமுறைக்கு எதிராக எதையும் செய்யமுடியவில்லை.

### தற்காலிக ஓய்வு

தங்களது பொருளாதாரக் கஷ்டங்களையும் மனக்குறைகளையும் பரிசீலனைக்கு எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்திருப்பதன் விளைவாக வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

பல்வேறு துறைகளையும் சேர்ந்த நாற்பதுக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் இணைந்தன. தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதனலேயே வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக அவை விளக்கமளித்தன. வேலைநிறுத்தத்தின் விளைவாக சுகாதாரம், தபால் மற்றும் ரயில் போன்ற சேவைகள் பாதிக்கப்பட்டன.

கல்வி, துறைமுகம், நீர்விநியோகம், பெற்றோலியம், வீதி அபிவிருத்தி, மின்சாரம் மற்றும் வங்கிச் சேவைகள் உட்பட ஏனைய துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் இணைந்தனர். தங்களது பிரச்சினைகள் மற்றும் அக்கறைகள் குறித்து ஆராய முன்வருவதாக ஜனாதிபதி செய்த அறிவிப்பு தொடர்பில் அரசாங்கத்துடன் பேசவிருப்பதாக கூறிய வேலைநிறுத்தம் செய்த தொழிற்சங்கங்கள் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியிருக்கின்றன. இது அரசாங்கம் அதன் தந்திரோபாயத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கும். 1980இல் பதவியில் இருந்த அரசாங்கத்தைப் போலன்றி, தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. கடந்த வருடத்தைய மக்கள் போராட்ட இயக்கத்துக்குப் பிறகு இன்றைய அரசாங்கத்துக்கு ஒரு சட்ட ஆணை மாத்திரமே இருக்கிறது.

மக்களின் விரக்திக்கும் வெறுப்புக்கும் மத்தியில் அரசாங்கம் இதுவரையில் விட்டுக்கொடுக்காமல் இருந்துவருகிறது. மக்கள் போராட்டம் அடக்கியொடுக்கப்பட்டிருக்கிறது. போராட்ட இயக்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். திட்டமிடப்பட்டபடி பொருட்களின் விலைகளும் வரிகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் உறுதிப்பாட்டுக்கும் நிதி வளங்கள் பெருக்கத்துக்கும் அவசியமான பொருளாதார மீட்சிக்கு முன்னுரிமை கொடுப்பது என்ற அடிப்படையில் அரசாங்கம் தான் எடுக்கும் மிகவும் கடுமையான நிலைப்பாடுகளை நியாயப்படுத்திக்கொண்டு வருகிறது.

ஆனால், மக்களின் அபிப்பிராயத்தை செவிமடுக்க மறுப்பதன் மூலம் அரசாங்கம் தன்னை தொழிற்சங்கங்களாக இருந்தாலென்ன, அரசியல் கட்சிகளாக இருந்தாலென்ன, ஒழுங்கமைக்கப்பட்ட சக்திகளுடன் ஒரு மோதல் போக்கிற்கே கொண்டு செல்கிறது. சமூகத்தின் ஏனைய பிரிவுகள் ஒப்பீட்டளவில் பாதிக்கப்படாமல் இருந்தாலும் கூட பொருளாதார சுமையின் கடுமை பரந்தளவு பிரிவினரை பெரிதும் பாதிக்கிறது. இது ஒரு பெரும் அநீதி என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது.அதை நிச்சயம் அதற்றவேண்டும்.தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலான அணுகுமுறையை மறுபரிசீலனை செய்வதும் தற்போதைய சூழ்நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தும் சைகைகளாக அமையமுடியும்.

மறபுறத்தில், சட்டத்தின் பிரகாரம் நடத்த வேண்டியிருப்பதும் ஏற்கெனவே இரு தடவைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் திகதி நிர்ணயிக்கப்பட்டதுமான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக காட்டிவருகின்ற மறுப்பு அரசியல் நெருக்கடியை மோசமாக்குகிறது. தேர்தல்களுக்கு தேவையான நிதி வளங்களை திறைசேரி விடுவிக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளுக்கு முரணாக எடுத்திருக்கும் நிலைப்பாட்டினால் அரசாங்கம் அதற்கான எதிர்ப்பை தொடர்ந்து விரிவடையச் செய்துகொண்டே போகிறது.

மக்களின் ஆதரவைப் பெறுவதில் தனக்கு இருக்கும் ஆற்றல் தொடர்பில் அரசாங்கத்துக்கு இருக்கும் அச்ச உணர்வே அது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை குழப்புவதற்கு கொண்டிருக்கும் திடசங்கற்பத்துக்கு காரணமாகும். எதிரணி கட்சிகளையும் விட மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே அரசாங்க கட்சிகளின் மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர மற்றும்படி ஒரு வருடத்துக்கு முன்னர் மக்கள் இயக்கத்தின் சீற்றத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் அபகீர்த்திக்குள்ளாகி பதவியிலிருந்து விலகிய அதே அரசியல் கட்சிகளினதும் அரசாங்கத்தினதும் உறுப்பினர்களையே தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கிறது.

### ஜனாதிபதியின் தெரிவுகள்

அரசாங்கம் இதுவரையில் அதற்கு இருக்கக்கூடிய நெருக்குதல்களுக்கு பொலிஸ் நடவடிக்கைகளின் மூலமாக போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதன் மூலமே பதிலளித்துவருகிறது. வீதிப்போராட்டங்களை அரசாங்கம் பொறுத்துக்கொள்ளத் தயாராயில்லை. அத்துடன் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் அரசாங்க நிறுவனங்கள் தனது விருப்புக்கேற்ப செயற்படவேண்டும் என்று அவை மீது அரசாங்கம் நெருக்குதலையும் பிரயோகிக்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான திகதிகளை நிர்ணயிப்பதில் தேர்தல் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் ஒரு தடவை அவமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த தேர்தல்களை மீண்டும் ஒத்திவைக்க வேண்டியிருக்கிறது போன்று இப்போது தோன்றுகிறது. அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதற்கு தன்னாலியன்றவரை சிறப்பாக சுயாதீனமாக செயற்பட்டுவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைச்சர்களுக்கு விடுக்கின்ற அழைப்பாணைகளையும் அரசாங்கம் அவமதிக்கிறது.

தேர்தல் நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை நிறுத்திவைப்பதற்கு எதிரான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை மதித்துச் செயற்படுவதற்கு அரசாங்கம் மறுப்பது நீண்டகால நோக்கில் நாட்டுக்கு பெரும் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் தாக்கமாகும். இவையெல்லாம் எதிர்காலத்தில் தகராறுகளையும் சட்டம் ஒழுங்கின்மையையும் கொண்டுவரக்கூடிய எதிர்மறையான போக்குகளாகும். இவை நீண்டகாலத்துக்கு நாட்டின் அபிவிருத்திக்கும் விழுமியங்களுக்கும் பாரிய பாதகவிளைவுகளைக் கொண்டுவரக் கூடியவையாகும்.

நிலைவரத்தின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ளக்கூடியவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பிரச்சினைகள் தொடர்பில் நெருக்குதல்கள் அதிகரிப்பது தவிர்க்கப்படவேண்டும். அனுபவமிக்க ஓர் அரசியல் தலைவராகவும் சிறந்த வாசிப்புப் பழக்கத்தைக் கொண்ட சர்வதேச அரசியல் மாணவராகவும் இருக்கும் ஜனாதிபதி, அரசாங்கத்தின் மூன்று கிளைகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய ஒரு மோதல் கொண்டுவரக்கூடிய ஆபத்துகளை நன்கு அறிவார்.

நீதித்துறையுடனான ஒரு மோதல் அல்லது நீதித்துறையின் தீர்மானங்களை மறுதலிக்கும் செயல் சட்டமுறைமை முழுமையின் மீதுமான நம்பிக்கையை அரித்துச்சென்றுவிடும். அரசியல் சமுதாயத்தின் உறுதிப்பாடு மற்றும் சட்டத்தின் ஆட்சி மீது அதற்கு இருக்கவேண்டிய பற்றுறுதியில் முதலீட்டாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நம்பிக்கையை இல்லாமல் செய்துவிடும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவேண்டிய தேவை குறித்த அமெரிக்கத் தூதுவரின் வலியுறுத்தல் இந்த உண்மையை உணர்த்தியிருக்கும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் அமெரிக்காவைப் போன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் ஜப்பானும் அதே நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை போன்ற நிதிச்சலுகைகள் மற்றும் பயன்களின் வடிவில் உலகின் மிகவும் பெரிய தனவந்த நாடுகளான இவற்றிடம் இலங்கையின் பொருளாதார உயிர்வாழ்வு, வர்த்தகம் மற்றும் உதவிகள் என்பன தங்கியிருக்கின்றன. அதனால் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் வருகின்ற இந்த நெருக்குதல்கள் தேர்தல்களின் திசையில் அரசாங்கத்தை உந்தித்தள்ளி மக்களிடமிருந்து புதிய ஆணையப் பெற நாட்டம் கொள்ளவைக்கக்கூடும்.

உருப்படியான முறையில் ஆட்சி செய்வதற்கும் அரசாங்கத்தின் நியாயப்பாட்டை வலுப்படுத்தவும் தேசிய நலன்களுக்காக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் தேர்தல் ஆணையொன்று தேவை. வேண்டப்படும் ஆணை உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் இல்லாமல் இருக்கலாம். எனினும், அங்கு அரசாங்கம் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதை கருத்துக்கணிப்புக்கள் காட்டுகின்றன. ஆனால், ஜனாதிபதி தனது தற்துணிபை பிரயோகிக்கக்கூடிய தேசிய மட்டத்தில் அந்த ஆணை வரக்கூடும்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1867 – இலங்கை ரயில் போக்குவரத்து வரலாற்றில் முதல் தடவையாக ரயில் எஞ்சின் ஒன்று இலங்கையின் உயர் புள்ளிகளில் ஒன்றான கடுகண்ணாவையை அடைந்தது.
- 1945 – அரபு நாடுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.
- 1965 – இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தது.
- 1982 – நாசாவின் கொலம்பியா விண்கலம் ஏவப்பட்டது.
- 1995 – சோவியத் விண்வெளி வீரர் வலேரி பொல்யாக்கொவ், விண்ணில் 438 நாட்களைக் கழித்துவிட்டு பூமிக்குத் திரும்பினார்.
- 1997 – ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்கு அருகில் வந்தது.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்!

அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

## 2023.03.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள்

**1. கைத்தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையை பலப்படுத்துவதற்காக கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கும் இடையிலான ஒப்பந்தம்.**

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் இயங்கி வரும் நியாகம தேசிய தொழிற் பயிற்சி நிறுவனத்தை மேம்படுத்துதல் மற்றும் இயலளவு விருத்திக்காக 2.15 பில்லியன் கொரிய வொன்களை நன்கொடையாக வழங்குவதற்கு கொரியக் குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவரும் கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை உடன்பாடு தெரிவித்துள்ளது. உத்தேச கருத்திட்டம் 2023ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கும் இடையில் ஒப்பந்த மொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப் பட்டுள்ளது. உத்தேச ஒப்பந்த வரைவுக்காக சட்ட மா அதிபரின் ஒப்புதல், வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள நாவலப்பிட்டி பஸ்பாகே கோரளே ஹைன்போர்ட் தோட்டக் காணியில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு காணித்துண்டுகள் வழங்குதல்.**

கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளே பிரதேசத்தில் அமைந்துள்ள 566 ஏக்கர்களுடன் கூடிய ஹைன்போர்ட் தோட்டக் காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை கருத்திற் கொண்டு, குறித்த காணியில் 200 ஏக்கர் காணியை வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு மற்றும் அவ்வாறான இடர்களுக்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்தான வலயங்களில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**3. சர்வதேச அணுசக்தி முகவராண்மை நிறுவனத்தின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டு உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்தல்.**

இலங்கை 1957ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச அணுசக்தி முகவராண்மை நிறுவனத்தின் ஆரம்ப உறுப்புநாடாக செயலாற்றி வருவதுடன், குறித்த நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் மருத்துவம், கைத்தொழில், பாதுகாப்பு, உணவு, விவசாயம், சுற்றாடல் மற்றும் வலுசக்தி திட்டமிடல் போன்ற துறைகளுக்காக தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்கின்றது. குறித்த தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குவதற்காக எமது நாட்டுக்கு வருகை தருகின்ற நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டு உரிமைகளை வழங்குவதற்கான உடன்பாடுகளில் இலங்கை இதுவரை கையொப்பமிடவில்லை. அதற்கமைய, சட்ட மா அதிபர் திணைக்களம், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, இலங்கை அணுசக்தி சபை மற்றும் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை போன்றவற்றின் உடன்பாடுகளுக்கமைய சர்வதேச அணுசக்தி முகவராண்மை நிறுவனத்தின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டு உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும், பின்னர் 1996ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைகள் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காகவும் வெளிவிவகார அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4. 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.**

பொதுநலவாய அமைப்புகளின் நாடுகளுக்கும் மற்றும் நாடுகளில் இருந்தும், வெளிநாட்டு அரசுகளுக்கும் மற்றும் அரசுகளிலிருந்தும் தப்பிச்சென்ற நபர்களை குறித்த நாட்டுக்கு மீள ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்கும், பொதுநலவாய அமைப்புகளின் நாடுகளுக்கும் மற்றும் நாடுகளில் இருந்தும், வெளிநாட்டு அரசுகளுக்கும் மற்றும் அரசுகளிலிருந்தும் மீள் ஒப்படைக்கப்பட்ட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அல்லது குற்றவாளிகள் பற்றிய செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கும், அவற்றுடன் தொடர்புடைய அல்லது விளைவாய்ந்த விடயங்களுக்கான ஏற்பாடுகளை வகுப்பதற்கும், 1977ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க மீள ஒப்படைத்தற் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தின் இரண்டாவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பொதுநலவாய அமைப்பு நாடுகள் தொடர்பாக வர்த்தமானியில் அறிவித்தல் ஒழுங்குவிதி மூலம் வெளியிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கு இயலுமை உண்டு. அதற்கமைய, 1977ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் திருத்தப்பட்ட ஒழுங்குவிதி 2023.02.14ஆம் திகதிய 2319/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதியை பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**5. 1969ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.**

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கீழ்காணும் ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது:

2023.02.22ஆம் திகதிய 2320/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க கட்டண விதிமுறைகள் மீதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகள் 2023.02.22ஆம் திகதிய 2320/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) விதிமுறைகள்

**6. பந்தயம் மற்றும் சூதாட்ட வரி (திருத்தம்) சட்டமூலம்.**

1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டத் திருத்தத்திற்காக 2022.07.04ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்காக சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காகவும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**7. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2023 - 2026 காலத்தில் விரிவான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.**

பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் நிலைபேற்றுத்தன்மை, நிதி உறுதிப்பாட்டை பாதுகாத்தல், இடர்களுக்கு ஆளாகக்கூடிய மக்களை பாதுகாத்தல், கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை துரிதப்படுத்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் இலங்கையில் காணப்படுகின்ற விருத்திக்கான ஆற்றல் வளங்களை கண்டறிதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கையின் பொருளாதார கொள்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதி வசதிகளின் கீழ் 48 மாதகால வேலைத்திட்டத்துக்காக விசேட மீட்பு உரித்துகள் (SDR) மூலம் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமனான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2022.09.01ஆம் திகதி இலங்கையானது, பணிக்குழாம் மட்டத்திலான ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதற்கமைய 2023 - 2026 காலப்பகுதிக்கான வரவு-செலவுத் திட்ட நிதியிடலுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் குறித்த விரிவான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்புடைய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இரண்டு வாரங்களில் மந்திரிமனை மீள் உருவாக்கப் பணிகள் ஆரம்பம்

சங்கிலியன் தோரண வாயில் வேலைகள் இரண்டு வார காலப் பகுதிக்குள் முடிவடைந்துவிடும். அதன்பின்னர் மந்திரிமனை மீள் உருவாக்க செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளோம். அதற்கான நிதியுதவிகளை மக்களிடம் கோருகிறோம் - என தொல்லியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகிலுள்ள மந்திரிமனை வளாகத்தினுள் உள்நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு விளக்கம் கொடுக்கும் முகமாகவே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 86 இடங்கள் மரபுரிமை இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதில் மந்திரிமனை, சங்கிலியன் தோரண வாசல், ஜமுனா ஏரி மற்றும் சங்கிலியன் அரண்மனை ஆகிய இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றுக்கான பெயர்ப் பலகையும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அவை வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் மரபுரிமை இடங்களாக அடையாளப்படுத்தி அதனை வர்த்தமானியில் பிரசுரம் செய்தால் நில உரிமையாளர்கள் அங்கு புதிதாக எதையும் மாற்றியமைக்க முடியாது. அதேசமயத்தில் தொல்லியல் திணைக்களமும் நில உரிமையாளரின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாது. இதுவே மந்திரிமனை உரிய காலத்தில் பேணப்படாமைக்கான காரணமாகும்.

அதேசமயம், தொல்லியல் திணைக்களம் மந்திரிமனை தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் நில உரிமையாளருடன் பேரம்பேசி அந்த நிலத்தைப் பெற்று அதனை சீர்செய்யும் வசதிகளும் நிலைமைகளும் தற்போது தொல்லியல் திணைக்களத்திடம் இல்லை. அதனால்தான் நாம் யாழ்ப்பாணத்தில் மரபுரிமை நிலையம் ஒன்றினை உருவாக்கி அதன் முதல் பணியாக சங்கிலியன் தோரண வாசலை மீள் உருவாக்கம் செய்து, அதுமுடிவுறும் நிலையில் இருக்கின்றது. இரண்டு வாரத்தில் அது முடிவடையும். அதை செய்வதற்கு எங்களுடைய மருத்துவபீட பேராசிரியர் மருத்துவர் ரவிராஜ் அதற்குரிய செலவான 2.2 மில்லியன் ரூபாவை ஏற்றுக்கொண்டார்.



மந்திரிமனையை மீள் உருவாக்கம் செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டபோது அதனுடைய உரிமையாளர் எங்களோடு தொடர்புகொண்டு சில நிபந்தனைகளை விதித்தார். தன்னுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு, தனியாரால் சில கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன எனவும், அவற்றை சட்டநாதர் கோவிலுக்குப் பெற்றுத்தருவதற்கு உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். நாங்களும் முயற்சி செய்தோம். அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை. பின்னர் நாங்கள் அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி எடுத்தோம். அதனை அவர் தவணை முறையில் பணம் செலுத்தி பெறுவதற்கு ஒப்புதலைத் தந்திருக்கின்றார்.

நாங்கள் தற்போது அதற்குரிய பணத்தை அவருக்குக் கொடுத்து மீள் உருவாக்கப் பணியை முன்னெடுத்துள்ளோம். சில ஆரம்பப் பணிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு செய்துகொண்டிருக்கும்பொழுதுதான் நில உரிமையாளர் ஒப்பந்தம் முடியும்வரை ஒன்றும் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

நாங்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் மீள் உருவாக்கம் செய்வதற்கான திட்டங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு அவை தொல்லியல் திணைக்களத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, சங்கிலியன் தோரண வாசல் வேலைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் மந்திரிமனையின் பணிகள் ஆரம்பிக்கப்படும். நினைத்த உடனே இதை செய்துகொள்ள முடியாது. பல மில்லியன் கணக்கான பணம் அவற்றை மீள உருவாக்குவதற்கு எங்களுக்குத் தேவை - என்றார்.

# யாழ். வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் பாரவூர்தி – மோட்டார்சைக்கிள் மோதி விபத்து

## ஒருவர் மரணம் – ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு குடத்தனைச் சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார். பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ள நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அம்மன் பகுதியிலிருந்து மணல் மண்ணை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியும், பருத்தித்துறை பகுதியிலிருந்து மருதங்கேணி நோக்கி பயணம் செய்துகொண்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே பலியானார். பலியானவர் வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியைச் சேர்ந்த கணேசன் என தெரிவிக்கப்படுகிறது.

அவரோடு வந்த பெண்மணி தற்போது சிகிச்சை தீவிர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான தீவிர விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

## 21.03.2023 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 10 7381 | 1147 14 |
| கனேடியன் டொலர் | 12 4374 | 135 5381 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 3 5 | 38 1121 |
| யூரோ | 227 5746 | 248 6725 |
| ஜப்பான் யென் | 1 3 58 | 1 4472 |
| சிங்கப்பூர் டொலர் | 124 8280 | 140 1465 |
| ஸ்ரேலிங் பவுன் | 276 5600 | 300 0803 |
| சுவிஸ் பிரான்ங் | 226 8052 | 252 6373 |
| ஐ.அ.டொலர் | 205 7372 | 223 8217 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 777 6403 |
| குவைட் | குவைட் தினார் | 0, 82 1401 |
| ஓமான் | ஓமான் றியால் | 76 2870 |
| கட்டார் | கட்டார் றியால் | 80 4262 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78 1 77 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80 1222 |

# மதவாச்சி புகையிரத நிலையத்தில் ஆயிரத்து 710 லீற்றர் டீசல் திருட்டு

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

மதவாச்சி புகையிரத நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசரில் ஏழு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான டீசலைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்ய மதவாச்சி பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு ரயில் வீதியின் திருத்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் பயன்பாட்டுக்காக 5,800 லீற்றர் கொள்ளளவுடைய பவுசரில் கொண்டுவரப்பட்டு மதவாச்சி புகையிரத நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது ஏழு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான 1,710 லீற்றர் எரிபொருள் காணாமல்போயுள்ளது.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் புகையிரத நிலையத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ரத்ன மல்லவினால் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே மதவாச்சி பொலிஸார் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அது சம்பந்தமான விசாரணை அறிக்கையொன்றினை மதவாச்சி நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ஐ.ஜீ.ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

## பெயர் மாற்றம்

கிராம நீதிமன்ற வீதி, ஏறாவூர் -06D எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை 892943362Vஆம் இலக்கத்தையுடைய அஸ்ரப் முகம்மது ஸுஜப் ஆகிய நான் முகம்மது ஸுஜப் எனும் எனது பழைய பெயரை முகம்மது சுகைப் என மாற்றி பயன்படுத்தி வருகின்றேன் என இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

- முகம்மது சுகைப்

## தேசிய லொத்தர் சபை / National Lotteries Board

திங்கட்கிழமை 2023.03.20 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5065 | ரூ. 20,701,026.00 | U | 6 1 5 8 6 5 |
| கொவிசெத | 3307 | ரூ. 88,378,456.00 | I | 13 25 48 74 |
| ஜாதிக சம்பத | 1520 | ரூ. 11,076,932.40 | வெற்றி இலக்கினம் | 3 5 4 7 3 2 |
| தன நிதானய | 1095 | ரூ. 82,083,769.20 | Q | 23 63 81 82 |
| ராசி சுப பலன் Handahana | 374 | ரூ. 2,750,891.40 | வெற்றி இலக்கினம்: தனுசு; விசேட இலக்கினம்: தனுசு | 25 42 51 59 |
| மெகா பவர் | 1413 | ரூ. 309,229,870.00 | F; சுப்பர் இலக்கம் 17 | 08 55 62 67 |

மெகா பவர்: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தி



## கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றக் கோரி மலையகமெங்கும் இன்று கறுப்பு தினம் அனுஷ்டிப்பு

(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்ட மக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து இன்றுடன் (22) 200 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

பெருந்தோட்ட தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அவர்களுக்கான அடிப்படை தேவைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

எனவே பெருந்தோட்ட மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றக்கோரி பெருந்தோட்டங்கள் முழுவதும் இன்று (22) கறுப்புப் போராட்ட தினமாக அனுஷ்டிக்கப்படுவதாக தோட்டத் தொழிலாளர் மையம் தெரிவித்துள்ளது.

''பெருந்தோட்ட மக்களுக்கு காணி, வீட்டுரிமை வழங்குங்கள், மக்களை ஏமாற்றும் பொய்ப் பிரசாரங்கள் வேண்டாம்'' என்ற தொனிப்பொருளில் இந்த கறுப்பு தினப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டிற்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதிகளவிலான மக்கள் இன்னும் சிறிய லயன் அறைகளிலேயே வாழ்கின்றார்கள்.







அவர்களுக்கு குறைந்தபட்ச மாத சம்பளத்தையாவது வழங்கவேண்டும். ஐந்து வருடங்களுக்கொருமுறை மாறி ஆட்சியமைக்கும் அரசுகளும் பெருந்தோட்ட மக்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்வதில்லை.

தோட்டத் தொழிலாளர்கள் தமது சொந்த மொழியில் பேசக்கூடிய வகையில் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் பல இடங்களில் இல்லை எனவும் தோட்டத் தொழிலாளர்கள் என்ற வகையில் அவர்களுக்கு வாக்குரிமை மாத்திரமே இருப்பதாகவும் தோட்டத் தொழிலாளர் மையம் தெரிவிக்கின்றது.

# குண்டும் குழியுமாக காட்சியளிக்கும் ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதி

## மக்கள் பெரும் அவதி; சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை


(மஸ்கெலியா நிருபர்)

நோர்வூட் எரிபொருள் நிரப்பும் நிலையம் முதல் பொகவந்தலாவை நகரம் வரையிலான பிரதான வீதி பாரியளவில் குண்டும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வீதியூடான போக்குவரத்தின்போது நோயாளிகள், கர்ப்பிணித்தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் என பலரும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வீதி அபிவிருத்தி செய்யும் பணி இடம்பெற்றபோதும் 'கொவிட் 19' வைரஸ் பரவல் மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வீதி செப்பனிடும் பணி இடை நடுவில் கைவிடப்பட்டன.

இதனால் அந்த பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கானோர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவசர சிகிச்சை பெற்றுகொள்ள அம்பியூலன்ஸ் மூலம் செல்ல முடியாத நிலையில் அந்த பிரதான வீதி உள்ளது.



இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கபரகலை மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோர் அம்பிட்டிகந்த தோட்டத் தொழிற்சாலைக்கு மாற்றம்

(பதுளை நிருபர்)

பண்டாரவளை – கபரகலை பெருந்தோட்டப் பிரிவில் கடந்த ஞாயிறன்று இரவு இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களைச் சேர்ந்த 240பேர் தற்போது அம்பிட்டிகந்த தோட்டத் தொழிற்சாலை கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 240 பேரும் இலக்கம் 3 தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பத்தில் தங்க வைக்கப்பட்டநிலையில், அங்கு அவர்களுக்கான போதிய இடவசதி, அடிப்படை வசதிகளும் இன்மையால் அவர்கள் தொழிற்சாலை கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டிருப்பவர்களில் சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்களும் அடங்கியுள்ளனர்.

மண்சரிவால் 4 தொழிலாளர் குடியிருப்புகள் முழுமையாகவும், 20 குடியிருப்புகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. தெய்வாதீனமாக உயிரிழப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. காயங்களுடன் உயிர்த் தப்பிய 7 பேர் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சமைத்த உணவு மற்றும் உலருணவுப் பொருட்களும் ஹல்துமுள்ளை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை உள்ளிட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் இணைந்து வழங்கி வருகின்றன.

## பாதிப்புக்கு தோட்ட முகாமைத்துவமும் இடர் முகாமைத்துவத்தினரும் பொறுப்புக்கூற வேண்டும் என்கிறார் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி நிதிச் செயலாளர் சலோபராஜா

இந்நிலையில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் இரா. சலோபராஜா கபரகலை தோட்டத்திற்கு விஜயம் செய்து, அனர்த்த நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் அம்பிட்டிக்கந்த தேயிலைத் தொழிற்சாலைக்கு சென்று, தங்கியிருக்கும் மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.



அத்துடன் பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் மற்றும் ஹல்துமுள்ளை பிரதேச செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை கிரமமாக வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்த பாதிப்புக்கு தோட்ட முகாமைத்துவமும், பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவத்தினரும் பொறுப்புக்கூற வேண்டும்.

மீரியபெத்தை மண்சரிவு இடம்பெற்ற வேளையில், கபரகலை தோட்டமும் மண்சரிவு அபாயப் பிரதேசமாக இனங்காணப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்டவர்கள் எவரும் கவனம் செலுத்தவில்லை.

மேலும் பெருந்தோட்டப்பகுதிகளில் 200 வருடங்களுக்கு மேற்பட்ட லயன் குடியிருப்புகளிலேயே பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதிகளில் பெருந்தொகையான இடங்கள் வசிப்பதற்கு பொருத்தமற்றதாகவே இனங்காணப்பட்டுள்ளது. இதனை கருத்திற்கொண்டு பெருந்தோட்ட கம்பனிகள் அரசாங்கத்துடனும், இடர் முகாமைத்துவ பிரிவினருடனும் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் பாரிய அனர்த்தங்கள் ஏற்படாதவாறு திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் இடம்பெற்ற 159 வருட பொலிஸ் வீரர் தினம்









(யாழ். நிருபர்)

159 வருட பொலிஸ் வீரர் தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று (21) இடம்பெற்றது.

கடமையின்போது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவுகூரும் வகையில் குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை



காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் கலந்துகொண்டு ஏற்றியிருந்த பொலிஸ் திணைக்களக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பூச்செண்டுகள் வைக்கப்பட்டு நினைவுகூரப்பட்டன.

இந்நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், உயிரிழந்த பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களின் உறவினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# அச்சுவேலியில் மதுபானம் கொடுத்து சிறுமி வன்புணர்வு; இருவர் விளக்கமறியலில்!

(யாழ். நிருபர்)

பதின்ம வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சட்ட மருத்துவ வல்லுனர் முன்னிலையில் இடம்பெற்ற பரிசோதனையில் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமை மற்றும் சிறுமி போதையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் மதுபானம் பருக்கப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டை பதிவுசெய்த பொலிஸார், பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவமனையில் சேர்ப்பிக்குமாறு கூறி சிறுமியை தாயாருடன் அனுப்பியிருந்தனர். சிறுமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ வல்லுநரிடம் முற்படுத்தப்பட்டார்.

அவரது சிறுநீர் பரிசோதனையில் மதுபான செறிவு இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் 22 மற்றும் 31 வயதுடைய இருவர் அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சுன்னாகத்தில் யுவதி தூக்கிட்டுத் தற்கொலை

(வட்டுக்கோட்டை நிருபர்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் 19 வயது யுவதி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

குறித்த யுவதி வீட்டில் யாரும் இல்லாதவேளை நேற்று முன்தினம் (20) பிற்பகல் தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவர் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலமானது மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் கஞ்சா கடத்தலுக்கு மோட்டார்சைக்கிள் கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தருக்குப் பிணை

(யாழ். நிருபர்)

கஞ்சா கடத்தலுக்கு மோட்டார்சைக்கிள் கொடுத்துதவிய குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் உத்தியோகத்தர் பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவரது சகோதரனான பொலிஸ் உத்தியோகத்தர் தலைமறைவாகியுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை மோட்டார்சைக்கிளில் வந்த நபர் ஒருவர் மோட்டார்சைக்கிளை வீதியில் கைவிட்டு தப்பி ஓடியுள்ளார்.

அதனை அவதானித்த பொலிஸார் மோட்டார்சைக்கிளை மீட்டபோது, மோட்டார்சைக்கிளிலிருந்து பொதி ஒன்றில் கஞ்சா போதைப் பொருள் காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து தப்பியோடிய நபரை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து, நீதிமன்று சந்தேக நபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்நிலையில், மோட்டார்சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடையது என பொலிஸார் கண்டறிந்ததையடுத்து, பொலிஸ் உத்தியோகத்தரை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தி மூன்று நாட்கள் பொலிஸ் காவலில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி பெற்றனர். விசாரணைகளின்போது தனது பெயரிலுள்ள மோட்டார்சைக்கிளை தனது சகோதரனான பொலிஸ் உத்தியோகத்தரே கடந்த பத்தாண்டு காலமாக பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து குறித்த நபரை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை குறித்த நபர் தலைமறைவாகியுள்ளார்.

அதேவேளை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து நீதிமன்று அவரை பிணையில் விடுவித்தது.

# வவுனியா ஊடகவியலாளருக்கு மகளிர் மகுடம் விருது

(வவுனியா நிருபர்)

வடமாகாண மகளிர் தின நிகழ்வில் வவுனியா மாவட்ட பிராந்திய ஊடகவியலாளருக்கு மகளிர் மகுடம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வடமாகாண மகளிர் அமைச்சும், யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வடமாகாண மகளிர் தின நிகழ்வை யாழ். கலாசார மண்டபத்தில் புதன்கிழமை நடத்தியிருந்தன.

இதன்போது வடமாகாணத்தில் சமூகசேவை, வைத்தியம், ஊடகம், விளையாட்டு, சுயதொழில், அரச நிர்வாகம் மற்றும் கலைத் துறையில் சாதனை படைத்த 8 பெண்களுக்கு மகளிர் மகுடம் என்னும் விருது வழங்கப்பட்டது.




இந்நிகழ்வில் ஊடகத்துறைக்கான மகளிர் மகுடம் விருதானது வவுனியா பிராந்திய ஊடகவியலாளர் திருமதி சிவகுமார் திவியந்தினிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதர், வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண மகளிர் அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுகளின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# இரு கொலைகளை செய்ய 20 இலட்சம் ரூபா வழங்கிய பெண்ணொருவர் ஹிக்கடுவையில் கைது

## பொலிஸ் விசாரணைகளில் பூறு மூனா தகவல்

ஹிக்கடுவையில் கடந்த வருடம் இருவரை படுகொலைசெய்ய 'பூறு மூனா' என அழைக்கப்படும் ரவிந்து சங்க டி சில்வாவுக்கு 20 இலட்சம் ரூபா ஒப்பந்தமொன்றை கையளித்ததாகக் கூறப்படும் 31 வயதான பெண்ணொருவர் நேற்று ஹிக்கடுவை, களுபே பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேல்மாகாண (தெற்கு) குற்றப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பூறு மூனாவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி 'பூறு மூனா' வெளிநாடு செல்வது தடுக்கப்பட்டபோதிலும் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சில பொலிஸார் மற்றும் பிக்குமாரின் உதவியுடன் தப்பிச்சென்றிருந்தார்.

எனினும், அவர் கடந்த 17ஆம் திகதி அவிசாவளையில் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வருடம் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று நீதிமன்றில் முன்னிலையாவதற்கு, மோட்டார்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இருவர், மற்றுமொரு இனந்தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இது தொடர்பில் ஹிக்கடுவை பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின்படி, இந்தக் இரட்டைக் கொலைகளை 'பூறு மூனா' 20 இலட்சம் ரூபா ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள பெண், பூறு மூனாவுக்கு மோட்டார்சைக்கிள், முச்சக்கரவண்டி, ரி-56 ரக துப்பாக்கி மற்றும் பணத்தை வழங்கி கொலைக்கு உதவி செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் காலி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக 48 மணிநேரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# 648 மில்லியன் ரூபா செலவில் இவ்வருடம் 864 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிக்க நடவடிக்கை

## இந்திய உதவியில் 760 வீடுகள்

இந்த வருடம் 648 மில்லியன் ரூபா செலவில் 864 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைவாக நடைமுறைப்படுத்தப் படும் 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின் கீழ் இந்த வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அத்துடன் இந்திய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 578 மில்லியன் ரூபா செலவில் 760 வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடமிருந்து உரிய நிதி கிடைத்த பின்னர் இந்த வருடத்திற்குள் வீட்டுத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக திறைசேரி நிதியின் கீழ் 76 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், 560 அரை சொகுசு வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அந்தத் திட்டத்தின் கீழ் 685 சதுர அடியில் 140 வீடுகளும், மூன்று அறைகள்கொண்ட 420 வீடுகளும் நிர்மாணிக்கப்படும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சி.டி.சி. இன்போர்ஸ் நிறுவனத்துடன் கடந்த ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துளாது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கமைய, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத வேலைத் திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக திறைசேரியினால் 3,750 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

'உங்களுக்கு வீடு – நாட்டிற்கு நாளை' மற்றும் 'மிஹிந்து நிவஹன' ஆகிய வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிப்பதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்துமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைவாக நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வருடம் 1500இற்கும் மேற்பட்ட உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான திட்டங்களையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்துள்ளது.

காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைந்து உரிமைப் பத்திரங்கள் வழங்குவது தொடர்பான பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்தார்.

# இரணைமடு குளத்தின் கீழ் 500 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதி


கல்மடு விவசாயிகளுக்கு இரணைமடு குளத்தின் கீழ் 500 ஏக்கர் நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கை தொடர்பான கலந்துரையாடல் இரணைமடு விவசாய சம்மேளன மண்டபத்தில் நேற்று (21) இடம்பெற்றதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் 82 ஆயிரம் ஏக்கர் அடி நீர் தேக்கப்பட்டுள்ள நிலையில் 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்தவகையில், 60 ஏக்கர் மறு பயிர்ச்செய்கைக்கும், 500 ஏக்கர் கல்மடு விவசாயிகளுக்கும் வழங்கவுள்ளோம். ஏனெனில், கல்மடு குளம் அபிவிருத்திக்காக திறந்துவிடப்பட்டுள்ளமையால் அங்கு சிறுபோகம் செய்ய முடியாதுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இவ்வாறு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# உலக நீர் தினம் இன்று அனுஷ்டிப்பு




(பேருவளை நிருபர்)

உலக நீர் தினம் இன்று உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. 1993ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் உலக நீர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வருடமும் மார்ச் 22ஆம் திகதி உலகம் பூராகவும் கடந்த 30 வருடகாலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

2023ஆம் ஆண்டு உலக நீர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொனிப்பொருள் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு நெருக்கடியை தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்தல் என்பதாகும்.

நீரின் தேவையும் அத்தியாவசியமும் கருதி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில் இந்நாள் பல்வேறு வேலைத்திட்டங்களோடு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயணித்துக்கொண்டிருந்த பஸ் நடுவீதியில் தீப்பிடித்து எரிந்தது



ஹொரண - இரத்தினபுரி வீதியில் பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு முன்பாக தனியார் பஸ் ஒன்று நேற்றுக் காலை (21) தீப்பற்றி எரிந்துள்ளதாக ஹொரணை தலைமையகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீப்பிடித்தவுடன், பயணிகள் வெளியே குதித்து தப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரியிலிருந்து பாணந்துறை நோக்கி பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஹொரண பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் பயணத்தை ஆரம்பித்த வேளையிலேயே திடீரென தீப்பற்றியுள்ளது.

அப்போது பஸ்ஸில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் இருந்தபோதும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஹொரணை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பஸ்ஸின் நான்கு சக்கரங்களைத் தவிர மற்ற பாகங்கள் அனைத்தும் நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# இருளில் மூழ்கியிருந்த இலங்கைக்கு ஜனாதிபதி ஒளி கொடுத்துவிட்டார்!

## இனி மக்களின் வாழ்க்கைச் செலவு குறையும் என்கிறார் ஆனந்தகுமார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான முயற்சியால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 07 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான கடன் வசதி கிடைக்கப்பெற்றமையானது இலங்கையை மீண்டும் பழைய நிலைக்கு ஈட்டுச்செல்லும் என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் வரலாறுகாணாத நெருக்கடிகளை சந்தித்திருந்த தருணத்தில் எமது நாடு அதலபாதாளத்துக்குள் வீழ்ந்துவிட்டதாகவும் இனி இந்த நாடு சோமாலியாவை போன்றதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் எனவும் அனைவரும் கூறினர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இன்று நாடு மீண்டெழுந்துள்ளதுடன் வெகுவிரைவாக பழைய நிலைக்குச் செல்லும் சூழல் உதயமாகியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வல்லமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே உள்ளது. அவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படாதிருந்தால் இன்று உண்மையிலேயே எமது நாடு சோமாலியாவாகதான் மாறியிருக்கும். மக்கள் வரிசையில் நின்ற யுகத்துக்கு வெறும் இரண்டு மாதத்தில் முடிவுகட்டிய ஜனாதிபதி இன்று மக்களின் வாழ்க்கைச் செலவையும் குறைப்பதற்கு பல கடினமான தீர்மானங்களை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி கடந்த காலத்தில் எடுத்திருந்த சில தீர்மானங்களால் மக்களுக்கு நேரடியான நன்மைகள் கிடைக்க வில்லையென எதிர்க்கட்சியினர் கூறினார்கள். ஆனால், அந்தத் தீர்மானங்கள்தான் இன்று நாட்டை மூச்சுவிடும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. எதிர்வரும் ஆறுமாத காலப்பகுதிக்குள் நாட்டின் பொருளாதாரச் சுமையை குறைக்க ஜனாதிபதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இதனால் டொலரின் பெறுமதி 200 ரூபாவரை குறையும். அதேபோன்று மக்களின் வாழ்க்கைச் செலவு, மின்சாரக் கட்டணங்கள், எரிபொருள் விலை உட்பட மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய அனைத்துக் காரணிகளிலும் விரைவில் மாற்றங்கள் ஏற்படும். அதற்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள அங்கீகாரம் பெறும் உதவியாக அமையும்.

தேர்தல்கள் நாட்டுக்கு அவசியம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், மக்களை பட்டினியில் போட்டுவிட்டு தேர்தலை நடத்தி யாருக்குப் பயன். தேர்தல் நடத்துவதற்கான சூழல் விரைவில் உருவாகும். அப்போது மக்கள் தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்ற முடியும். ஜனாதிபதியின் தலைமைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் பார்த்துக்கொண்டிருக்கும் மக்கள் அவரை அடுத்த பல ஆண்டுகளுக்கு நாட்டின் ஜனாதிபதியாக தொடரச்செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது - எனவும் கூறியுள்ளார்.

# ஆசிரிய சிகரம் பிலிப் இராமையா பிறந்த தின சிறப்பு மலர் வெளியீடு

மலையகத்தின் மூத்த ஆசிரியர்களில் ஒருவரான பிலிப் இராமையாவின் 90ஆவது பிறந்த தின விழாவும் மலர் வெளியீடும் மார்ச் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இராகலை உயர் பாடசாலையில் இடம்பெறவிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் இவருக்காக் வெளிவருகின்ற மலர் முக்கியத்துவம் நிறைந்த ஒன்றாகும்.

இந்த ஆண்டு மலையகம் 200 என்ற மையப்பொருளில் மலையகப் பிரதேசங்கள் பலவற்றிலும் பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. பல இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளன. அந்தவகையில் 90ஐ தொடுகின்ற ஆசிரியர் பிலிப் இராமையா பற்றிய மலர் வெளியீடும் ஒன்றாகக் கருதலாம். இவரது வாழ்வு இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னரான 75 ஆண்டுகால பகுதியை உள்ளடக்கியதாகும். இக்காலகட்ட சமூக அரசியல் சூழ்நிலைகளை தரிசிக்கின்ற வாய்ப்பை இவரது மாணவர்கள் 9 பேரும் இவரது நெருங்கிய நண்பர்கள் 11 பேரும் எழுதியுள்ள அனுபவப்பகிர்வுகள் வழங்கியுள்ளது. இதற்கு மேலாக இவர் தந்துள்ள நீண்ட நேர்காணல் இவரூடாக 75 ஆண்டுகால மலையக சமூகத்தின் பல்வேறு அம்சங்களை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

330 பக்கங்களைக்கொண்ட கனதியான இந்த மலர் 25 கட்டுரைகளை உள்ளடக்கியதாய் காத்திரமான ஒன்றாகத் திகழ்கிறது. இவற்றுள் பெரும்பாலானவை மலையகம் சார்ந்தவை. கல்வி குறித்த 3, இலக்கியம் சார்ந்த 8, சமூகம் சார்ந்த 5, அரசியல் சார்ந்த 9 என பலதுறைகளை 225 பக்கங்களில் உள்ளடக்கியுள்ளது.

இக்கட்டுரைகளை பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், அரச ஊழியர்கள் என பல தரப்பினர்களும் படைத்துள்ளனர். அந்த வகையில் இந்த மலர் பல்வேறுபட்ட அம்சங்களை சுமந்து வந்துள்ளது.



மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் 10ஆவது ஆண்டு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

# கடல்சார் காவல் - பாதுகாப்பு தொடர்பான ஐயோரா பணிக்குழுவின் மூன்றாவது கூட்டம்

## இலங்கை முன்னெடுப்பு

இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் (ஐயோரா) கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான செயற்குழுவின் மூன்றாவது கூட்டம் இலங்கையின் தலைமையில் நேற்று முன்தினம் (20) 23 ஐயோரா உறுப்பு நாடுகளின் பங்கேற்புடன் கொழும்பில் நடைபெற்றது. ஐயோரா செயலகத்தின் பொதுச் செயலாளர் சல்மான் அல்-ஃபரிசி மற்றும் செயலகத்தின் பிரதிநிதிகள் மொரிஷியஸிலுள்ள ஐயோரா செயலகத்திலிருந்து இணையவழி மெய்நிகர் முறையில் பங்கேற்றனர்.

கூட்டத்தை ஆரம்பித்துவைத்த வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு மன்றமாக ஐயோராவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்புத் துறையில், கொழும்பு பணிக்குழுவில் கலந்துரையாடப்பட்ட தலைப்பில், இந்து சமுத்திரத்தின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தின் கீழ், சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகள் குறித்து ஐயோரா உறுப்புநாடுகளுக்கு விழிப்புணர்வு அவசியம் என வெளியுறவுச் செயலாளர் விஜேவர்தன குறிப்பிட்டார்.

இந்து சமுத்திர விளிம்புப் பகுதியானது, கடற்கொள்ளை, கடலில் ஆயுதமேந்திய கொள்ளைகள், ஆட்கடத்தல், மனிதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல், அத்துடன், வனவிலங்குகளை சட்டவிரோதமாகக் கடத்தல், சட்டவிரோதமான, முறைப்பாடளிக்கப்படாத





மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தல், கடல் மாசுபாடு, கடல் வளங்களை அதிகமாக சுரண்டுதல் மற்றும் அபாயகரமான பொருட்களின் சட்டவிரோதப் போக்குவரத்து போன்ற நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் உட்பட பல பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற காவல் மற்றும் பாதுகாப்புசார் சவால்களை எதிர்கொள்கின்றது. காலநிலை மாற்றம் மற்றும் கடல் பல்லுயிர் அழிவு ஆகியவை இந்து சமுத்திரத்தின் காவல் மற்றும் பாதுகாப்பிற்கு சவால் விடுகின்றன. பௌதீக ரீதியாகவும், டிஜிட்டல் ரீதியாகவும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் பாதிக்கப்படக்கூடிய கடலுடன் இணைக்கப்பட்டுள்ள முக்கியமான உட்கட்டமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

2023 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் ஐயோராவின் தலைவராக இலங்கை பொறுப்பேற்கும் என வெளிவிவகார செயலாளர் விஜேவர்தன சுட்டிக்காட்டினார். இந்தப் பாத்திரத்தில் இலங்கை தற்போதைய தலைவராக பங்களாதேஷ் மற்றும் கடந்த தலைவராக ஐக்கிய அரபு இராச்சியம் ஆற்றிய முக்கிய பணியைக் கட்டியெழுப்பும். ஐயோரா உறுப்புநாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு அதன் உறுப்புநாடுகளின் மற்றும் அதற்கு அப்பாலுள்ள செழுமைக்காக பாதுகாப்பான, வளமான மற்றும் நிலையான இந்து சமுத்திரத்தை நோக்கி இட்டுச்செல்லும் என்பதில் இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இணையவழி மெய்நிகர் முறையில் இணைந்த கடல்சார் ஐயோராவின் பொதுச் செயலாளர் சல்மான் அல்-ஃபரிசி, பிராந்தியத்தில் காவல் மற்றும் பாதுகாப்பு ஒரு முக்கிய அபிவிருத்திப் பிரச்சினையாக இருப்பதால், பிராந்தியத்தில் பொதுவான காவல் மற்றும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கான தீர்வுகளைத் தேடுவதற்கு உறுப்புநாடுகள் தமது உரையாடலையும் முயற்சிகளையும் தொடர்ந்தும் வலுப்படுத்துவது அவசியமாகும் என எடுத்துரைத்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐயோரா உறுப்பு நாடுகள் மற்றும் உரையாடல் பங்காளர் நாடுகளின் தூதரகத் தலைவர்கள், இலங்கை கடற்படைத் தளபதி, கடற்றொழில் அமைச்சு, இலங்கை கடற்படை, இலங்கை கடலோரக் காவல்படை, இலங்கை துறைமுக அதிகாரசபை, வணிகக் கப்பல் செயலகம், இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழு உள்ளிட்ட தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள், போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம், உலகளாவிய கடல்சார் குற்றத் திட்டம் மற்றும் மெக்ஸ் பிளேன்க் அறக்கட்டளையின் அதிகாரிகள் மற்றும் ஜிஸ் இன் பிரதிநிதிகள் ஆகியோர் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கொமோரோஸ், பிரான்ஸ், இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், கென்யா, மடகாஸ்கர், மலேசியா, மாலைதீவு, மொரிஷியஸ், மொசாம்பிக், ஓமான், சீஷெல்ஸ், சிங்கப்பூர், சோமாலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, தன்சானியா, தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் எமன் ஆகிய ஐயோரா உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலய 'புலமை மொட்டுகள்' சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு






- எம்.எஸ்.எம்.ஸாகிர் -

சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் 'புலமை மொட்டுகள்' சாதனையாளர் பாராட்டு விழா சனிக்கிழமை (18) மாளிகைக்காடு பாவா ரோயலி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடுசெய்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், கல்முனை கல்வி வலய மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எம்.எம். முஹம்மட் முனாஸ், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் ஆரம்பக்கல்வி ஏ.எல்.எம்.ஜஹாங்கீர், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹரூன், ஆஸிப் சோறூம் உரிமையாளர் எஸ்.எச்.ஜிப்ரி ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போது புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 33 மாணவர்கள் மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 10 மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், சாய்ந்தமருது கோட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் ஏ.ஜீ.எம். அஹ்னாப் (178) மற்றும் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களான எம்.எச்.வை.எம்.அக்மல் ஹம்தி (167), கே.எவ்.எம்.சந்தனம் (162), எம்.இஸட்.எவ். ஸின்ஹா றிதா (157), எச்.எம்.இஷான் (148) ஆகியோருடன், மிகவும் கஷ்டத்தின் மத்தியில் கல்வி கற்று கடுமையாக முயற்சி எடுத்த மாணவன் எம்.என்.எம்.நாஸிப் (142) ஆகியோர் பதக்கம் அணிவித்து நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த வகுப்பாசிரியர்களும் பகுதித் தலைவர் மற்றும் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் ஆகியோர் பாடசாலைக்கு வழங்கிவருகின்ற மகத்தான சேவையையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# சந்தர்ப்பத்தினை வாய்ப்பாகப் பயன்படுத்தி முன்னேற வேண்டியது காலத்தின் தேவை!

## இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன்



(துறைநீலாவணை செய்தியாளர்)

காலம் எங்களைக் கடந்து செல்வதற்கு முன்பாக நாம் பயணிக்கவேண்டியதுடன், சந்தர்ப்பத்தினை வாய்ப்பாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒவ்வொருவரும் தங்களை வழிப்படுத்திக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது - என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

துறைநீலாவணைக் கிராமத்தில் நடைபெற்ற அமரர் சரவணமுத்து ஞாபகார்த்த கூடைப்பந் தாட்டத் திடல் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல சவால்களுக்கு மத்தியில் முன்னேற்றமடைந்த கிராமங்கள் மத்தியில் துறைநீலாவணைக் கிராமத்திற்கு தனியிடம் இருக்கின்றது. அதற்கு காரணகர்த்தாவாக அமைந்தவர் மறைந்த சரவணமுத்து. அவர் விட்டுச்சென்ற மக்கள்நேயப்பணியினை அவரது புதல்வனும் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தனது சொந்த நிதியில் தான் பிறந்த கிராமத்தில் செய்து காட்டியிருக்கின்றார். இது வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டிய விடயமாகும்.

சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகின்றபோது அதனைச் சரியான முறையில் நேர்ச் சிந்தனைகளுடன் கடைப்பிடிக்கின்றபோது வாழ்க்கையில் முன்னேற்றமடைய முடியும். முயற்சி செய்ய வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தினை பெற்றோர் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளுக்கு பெற்றோர் கொடுக்கும் ஒத்துழைப்பினைப் போன்று விளையாட்டுக்கும் கொடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் விளையாட்டுகளில் திறமை பெற்றவர்களாகப் பேசப்படுபவர்கள் பெறுகின்ற ஊதியத்தினை கணக்கில் அடக்க முடியாது. அந்தளவு மிகப்பெரிய தொகையாகும். வாழ்க்கையில் முன்னேற்றம் காணவில்லையென பின்நோக்கிச் செல்லாது பலத்தினை பிரயோகித்து முன்னேற்றத்தினை நோக்கிச் செல்லவேண்டும். அதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். வாய்ப்பினை உரியவாறு பயன்படுத்த வேண்டும். திட்டமிட்டு முன்னேற வேண்டும். இதுவே எமது வெற்றிக்கு அடிப்படையாக அமையும்.

திறமைக்கு இன, மொழி தடையாக அமையாது. திறமையானவர்கள் இனங்காணப்பட்டு பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் கடந்து சர்வதேசம் வரைக்கும் பயணிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் கிராமத்திலிருந்து உருவாக வேண்டும். இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக வருடாந்தம் பல இலட்ச ரூபா விளையாட்டுக்காக செலவு செய்யப்பட்டு வருகின்றன. விளையாட்டுத்துறையினை மேம்படுத்தும் வகையில் அரசாங்கமானது பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகுமெனத் தெரிவித்தார்.

# கல்முனை பிரதான வீதியில் சரிந்த மரம்: துரிதமாக போக்குவரத்தை சீர்செய்த பொலிஸார்

(பாறுக் ஷிஹான்)



கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை (21) மதியம் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் இருந்த பாரிய மரமொன்று வேரோடு சாய்ந்ததில் தொலைத்தொடர்பு வயர்கள் துண்டிக்கப்பட்டதுடன், பொதுப் போக்குவரத்தும் தடைப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 6 வருடங்கள் பழைமை வாய்ந்த காயா எனப்படும் மரம் ஒன்றே இவ்வாறு பிரதான வீதியில் சரிந்ததுடன், போக்குவரத்தில் ஈடுபட்ட எவருக்கும் காயமேற்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் விழுந்த மரத்தை துண்டாக்கி அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இச்செயற்பாட்டிற்கு உதவியாக கல்முனை மாநகர தீயணைப்புப் பிரிவினரும் இயந்திர வாள் உதவியுடன் குறித்த மரத்தைத் துண்டித்து பொதுப் போக்குவரத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதேவேளை, குறித்த மரம் சாய்ந்தமையினால் அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி கல்முனை போக்குவரத்து பொலிஸாரினால் இரு வழி பாதையாக தற்காலிகமாக மாற்றப்பட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவபூமி திருமந்திர அரண்மனை திறப்பு விழா



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை சம்பிரதாயபூர்வமாக 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளதாக செஞ்சோற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

மேலும், 3 ஆயிரம் தமிழ்ப் பாடல்கள், பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தை கையால் உளிகொண்டு மூன்று ஆண்டுகளாக இளைஞர்கள் கருங்கல்லில் செதுக்கியுள்ளனர். இந்தப் பாடல்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 108 சிவலிங்கமும் நடுவில் கருங்கல்லினால் ஆக்கப்பட்ட கோவிலில் முகலிங்கப்பெருமானும் கிழக்கிலங்கையில் முதல் முதலாக வித்தியாசமான முறையில் காட்சியளிக்கின்றன.

உலகிலேயே 3 ஆயிரம் தமிழ்ப்பாடல்களை கருங்கல்லில் பதிப்பித்த பெருமை சிவபூமி அறக்கட்டளையைச் சாரும். இதைத் தாங்குகின்ற பெருமை கிழக்கிலங்கை மக்களைச் சாரும். எனவே, இந்த அற்புதமான நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.




கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/அல்-ஹுசைன் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை பிரதி அதிபர் ஏ.எம்.நளீமின் நெறிப்படுத்தலில் பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.ஏ.நழீர் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (20) இடம்பெற்றது. அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் ஐ.எல்.எம். நிப்ராஸினால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், கோட்டக்கல்வி அதிகாரி ஜே.டேவிட், பொலிஸ் பரிசோதகர் எம்.எம்.ஹஸீப், பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)




'மாணவச் செல்வங்களுடன் நாம் 2023' எனும் தொனிப்பொருளில் பாடசாலை உபகரணங்கள் தேவையுடைய 500 மாணவர்களுக்கான அப்பியாச பயிற்சிக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு உகண பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஓ.சி.டி. அமைப்பின் தலைவரும், விஞ்ஞான முதுமாணியும், சமூக சேவையாளருமான அஸ்மி யாசீன் மற்றும் அப்பிரதேச வணக்கஸ்தலத்திற்கு பொறுப்பான மதகுரு உட்பட ஓ.சி.டி அமைப்பின் அங்கத்தினர்களும் கலந்துகொண்டிருந்தனர். (அகீல் சிஹாப்)

# ஆழ்கடல் பகுதியில் சுழியோடிய சிறுவர்கள்

(கிண்ணியா செய்தியாளர்)



திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு கீழுள்ள ஆழ்கடல் பகுதியில் மூன்று சிறுவர்கள் திங்கட்கிழமை (20) காலை சுழியோடி கடலுக்கடியில் உள்ள கோவிலின் சிலைகள் மற்றும் சிதைவுகளை கண்டறிந்தனர். அத்துடன் வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

வெளிநாட்டு படையெடுப்புகளினால் பல வரலாற்றுச் சின்னங்கள், கோவில்கள் அழிக்கப்பட்டன. அதில் திருகோணமலை கோணேசர் கோவிலும் ஒன்றாகும். இராவணன் தொடக்கம் பல தமிழ் மன்னர்களின் ஆட்சியின் அடையாளமாக விளங்கிய இத்தளம் இடிக்கப்பட்டு பல சிலைகள் திருடப்பட்டு, கடலுக்கு அடியிலும் வீசப்பட்டன. அதன் சிதைவுகள் பல வரலாறுகள் கடந்தும் ஆழ்கடலில் காணப்படுகிறது. அதனை வெளிக்கொணர்வதும், உலகறியச் செய்வதும், அதனை கண்டு களித்து, தரிசித்து வரவும் இந்த சுழியோடி செயல்பாடு பயனுள்ளதாக அமையும்.

கோணேசர் கோவிலின் கீழ்ப்பகுதி கடலின் அதிகூடிய ஆழம் கடல் மட்டத்திலிருந்து 12இலிருந்து 15 மீற்றராகும். இவ்வாழம் வரை இச்சிறுவர்கள் சுழியோடியமை குறிப்பிடத்தக்கது. சுழியோடும் செயற்பாடு நீச்சல், சுழியோடி பயிற்றுவிப்பாளர் நந்தன விஜயலால் (Yana foundation - Swimming Academy), ஜெயசீலன் (சர்வதேச ஆழ்கடல் சுழியோடி பயிற்சியாளர் - Trinco Blue Water Sports) ஆகிய இருவரின் பயிற்றுவிப்பில் நடத்தப்பட்டது.

இச்சிறுவர்கள் Yana foundation - Swimming Academyஇல் சிறந்த முறையில் நீச்சல், ஆழ்கடல் சுழியோடும் பயிற்சி பெற்றவர்கள். Trinco Aid நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இதற்கு முன்னரும் பலர் இங்கு சுழியோடியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com




அட்டாளைச்சேனை சம்புநகர் அக்/அல்-மினா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர் மன்றத்தில் திறமை காட்டிய மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு மாணவி ஏ.என்.கதீஜா தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது. பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஏ.கே. றிஸ்னா, எஸ்.டி.சீ. உறுப்பினர் ஏ.எல்.எம். அர்சாத், பெற்றோர் எம்.ஆர்.சித்தானா ஆகியோரால் பரிசுகள் வழங்கப்பட்டன. அருகில் பிரதி அதிபர் எம்.எச்.அப்துல் ஹைஹ, ஆசிரியர் எம்.ஏ.ஏ.அஸீஸ், ஏ.கே.சம்ஹறிகா உட்பட பெற்றோர்கள் நிற்பதையும் காணலாம். (அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)






காத்தான்குடி FIRST ROOTS சர்வதேச பாடசாலையின் வருடாந்த கௌரவிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (19) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ.அஹமட் அறபாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.சி.ஏ.நஸார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாணவர்களது திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையிலான கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், அதிதிகளால் மாணவர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி செய்தியாளர்)

# நூல் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்



(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் 84 வருட வரலாற்றில் இறை பணியாற்றி வபாத்தான 22 உலமாக்களையும் 60 வயதுக்கு மேற்பட்ட 06 உலமாக்களையும் கௌரவித்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலாகத்தொகுத்து வெளியிடும் நிகழ்வு நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை(19) நடைபெற்றது.

நிந்தவூர் ஜம்இய்யாவின் தலைவர் மௌலவி என்.இஸ்மத் (ஷர்க்கி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்-ஷெய்க் அர்கம் நூர்ஆமித் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட ஜம்இய்யாவின் தலைவர் அஷ்-ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எஸ்.எம்.பி.எம்.பாரூக் இப்ராஹீம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிம், நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பிரதேச செயலாளர் ஏ.எம்.லத்தீப் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் பிரதித் தலைவரும் ஸஹ்வா இஸ்லாமிய்யா அரபுக்கல்லூரியின் முன்னாள் முதல்வருமான அஷ்-ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஸிம் ஸூரி ரியாதியும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக வெளிநாட்டுப் பறவைகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது. அந்த வகையில் கிரான்குளம் வயற் பிரதேசத்தில் வெளிநாட்டுப் பறவைகள் வருகை தந்திருப்பதை காணலாம். (கல்லடி செய்தியாளர்)

# மட்டக்களப்பு மூக்குறையான் குளம் பகுதியில் இனந்தெரியாதோரால் கால்நடைகள் வெட்டிக் கொலை



(கிரான் செய்தியாளர்)

மட்டக்களப்பு கிரான் பிரதேச எல்லைக்குட்பட்ட அக்குறணை மூக்குறையான் குளம் வயல் பிரதேசத்தில் திங்கட்கிழமை (20) இரவு கால்நடைகள் அடைக்கப்பட்ட பாற் பண்ணைக்குள் உட்புகுந்த இனந்தெரியாதோர் கால்நடைகளை வெட்டியும் கூரிய ஆயுதங்களால் தாக்கியும் படுகொலை செய்துள்ளதாக பாற்பண்ணை உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவ தினமன்று மாலை மேய்ச்சலுக்குச் சென்று வந்த மாடுகளை பண்ணைக்குள் அடைத்துவிட்டு, இரவு காவல் குடில்களுக்குச் சென்றுள்ளனர். பின்னர் மறுநாள் காலை வந்து பார்த்தபோது இவ்வாறு மாடுகள் வெட்டியும் படுகொலைசெய்தும் காணப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து பண்ணையாளர் தெரிவிக்கையில்,

04 மாடுகளை இறைச்சிக்காக அறுத்துச் சென்றுள்ளனர். ஒரு மாடு வெட்டுக்காயங்களுக்குள்ளாகியுள்ளது. அத்துடன், இரவுவேளையில், தனிமையில் பண்ணை காவல் குடில்களில் தூங்கினால் யானைத் தாக்குதலுக்கு இலக்காக நேரிடும் என்ற அச்சமும் எம்மிடம் உள்ளது. அண்மையிலும்கூட திகிலிவெட்டை, குடும்பிமலை பிரதேசங்களில் யானைத் தாக்குதல்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இவ்வாறான அச்சம் காரணமாகதான் பல பண்ணையாளர்கள் ஒன்றுசேர்ந்து இரவில் காவல் காத்துவருகிறோம் - என்றார்.

இதனால் பொருளாதார ரீதியாக தாங்கள் பின்னடைவைச் சந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி

# புலஸ்தினி நாட்டை விட்டு வெளியேற உதவிய பொலிஸ் பொறுப்பதிகாரி பிணையில் விடுதலை

(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் ஒரு முக்கிய சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் (ஸாரா ஜஸ்மின்) என்பவர் இந்தியாவிற்கு தப்பிச்செல்ல தனது வாகனத்தில் ஏற்றிச்சென்ற குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டு மூன்று வருடங்களாக சிறையில் இருக்கும் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் திங்கட்கிழமை (20) பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நாகூர்த்தம்பி அபூபக்கர் புலஸ்தினி மகேந்திரனைப் பற்றிய தகவலைத் தெரிந்தும் அதனை வெளிப்படுத்தாமைக்காகவும் அவரை நாட்டைவிட்டு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு 9 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 08ஆம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். தான் செய்யாத குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றமையானது தனது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகக் கூறி பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் 2021 ஜூன் மாதம் 29ஆம் திகதி இலங்கை உச்ச நீதிமன்றில் தனது சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமான ஏ.எல்.ஆஸாதினூடாக அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், சுமார் 32 மாதங்களாக தடுப்புக்காவலிலும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் திங்கட்கிழமை மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ்வினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அரச சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஸக்கி இஸ்மாயில் குறிப்பட்ட நபருக்கு பிணை வழங்கப்படுவதற்கு எதிராக தனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்தார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம்.ஷஹீட், சட்டத்தரணிகளான ஏ.எல்.ஆஸாத், சலாஹுதீன் சப்ரின் மற்றும் பாத்திமா பஸீலா ஆகியோர் செய்த சமர்ப்பணங்களைச் செவியேற்ற நீதிபதி அவரை பிணையில் விடுதலை செய்தார்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டமானது ஒரு கொடூரமான சட்டமாகவும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைகளில் அதீத அதிகாரத்தை வழங்கி சட்டத்துக்கு முரணான கைது, தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதை போன்ற குற்றங்களுக்கு இடமளிக்கும் சட்டமாகவும் இருந்துவருகிறது. இதனை இல்லாதொழிக்க மனித உரிமை அமைப்புகள் மும்முரமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல ஆண்டுகளாக செயற்பட்டு வருகின்றன.

# மஹதிவுல்வெவ பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றுக்கு சீல் வைப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மஹதிவுல்வெவ பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றுக்கு திங்கட்கிழமை (20) மாலை சீல் வைக்கப்பட்டுள்ளது. ஹொரவப்பொத்தானை சந்தைக்குச் சென்று வீசப்படுகின்ற மரக்கறிகளை கொண்டுவந்து சமைப்பதற்கு பயன்படுத்தி வருவதாகவும், சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்து வருவதாகவும் கோமரங்கடவல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த ஹோட்டலை சோதனையிட்டபோது ஹோட்டலுக்கு பின்னால் வெவ்வேறாக மரக்கறி வகைகள் குவிக்கப்பட்டிருந்த நிலையில் மரக்கறிக்கு மேலால் நாய் உறங்கிக்கொண்டிருப்பதை அவதானித்ததாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பாவனைக்குப் பயன்படுத்த முடியாத உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்ட அதேவேளை, குறித்த ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் மதுபோதையில் பொது சமாதானத்தை சீர்குலைத்த குற்றத்திற்காக பொலிஸாரினால் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(21) ஆஜர்படுத்தியபோது குறித்த நபருக்கு 2ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

---

(கோணாவத்தை செய்தியாளர்)


அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாறை வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த நான்கு உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரங்களை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த உழவு இயந்திரங்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (21) ஆஜர்படுத்தியபோது ஒவ்வொருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இவ்வுழவு இயந்திரங்களுக்கு முன்குற்றம் இருந்தமையினால் மேற்படி தண்டப்பணம் வழங்கப்பட்டதுடன், உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# ஆளும் அதிகார சக்திகளின் ஆடுகளமாக மாறப்போகும் மக்கள் பிரதிநிதிகள் சபை

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் காட்டம்



(எருவில் செய்தியாளர்)

தற்போதைய நிலையில் ஜனாதிபதியும் ஆளுங்கட்சியினரும் எந்தவோர் தேர்தலையும் விரும்பவில்லை. இதற்கான மூலகாரணம் தேர்தலில் ஆளும் கட்சியினர் படுதோல்வியடைவார்கள் என்ற அச்சமேயாகும். ஆளும் அதிகாரிகளின் நியமனக்களமாகவும் அரசியல் இலாப நோக்க ஆடுகளமாகவும் சபைகள் மாற இடமுண்டு. மக்களும் எதிர்க்கட்சிகளும் இணைந்தால் இதற்கான பதிலை விரைவாக அளிக்க முடியும். ஜனநாயக விரோத அதிகார சக்திக்கு மக்கள் சக்தியே அதிர்ச்சியான வைத்தியம் அளிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டமையால், 340 உள்ளூராட்சி சபைகளும் ஆளுநர்களின் அதிகாரப்பிடிக்குள் வந்துள்ளன. ஏற்கனவே 9 மாகாண சபைகளும் ஆளுநர்களின் முழுமையான அதிகாரப்பிடிக்குள் வந்து 5 வருடங்களாக அடங்கிக்கிடக்கின்றன. எனினும், நாட்டில் தேர்தல்கள் இல்லாத, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சபைகளாக உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் ஆக்கப்பட்டுள்ளன. எனவே, ஆளுநர்கள் தமது அதிகாரங்களைக்கொண்டு ஜனாதிபதிக்கும், பொதுஜன பெரமுனக் கட்சிக்கும் மிகவும் விசுவாசமான அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு வாய்ப்புள்ளது.

இவர்கள் உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர்களாக, செயலாளர்களாக இருந்து பணியாற்றப் போகின்றார்கள். குறிப்பாக, கிழக்கு மாகாண ஆளுநர் மாகாண சபையில் திருப்தியீனமாக நடந்துகொள்வதுபோல், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள் நியமனத்திலும் நடந்துகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, தேர்தல் இல்லாத நிலையில் மாகாண சபைகளைப்போல், உள்ளூராட்சி சபைகளும் ஆளுங்கட்சியின் அதிகார ஆடுகளமாக மாறப்போகின்றன. ஏற்கனவே பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மூலமாக மக்களுக்கான நிவாரணங்கள், தொழில்சார் உதவிகளில் ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, மட்டக்களப்பில் தோணிகள், வலைகள், துவிச்சக்கரவண்டிகள், வீடுகள், ஆடுகள், கோழிக்குஞ்சுகள், நிவாரணங்கள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இப்படியான போக்குகள் உள்ளூராட்சி சனபகளிலும் தொற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது. தேர்தல்கள் இல்லாத, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழல் மேலும் மக்களுக்கு ஆபத்தாக அமைய இடமளிக்கலாம்.


ஏற்கனவே கிழக்கு மாகாண ஆளுனர், தமக்கு சார்பான ஆணையாளர் ஒருவரை மட்டக்களப்பு மாநகர சபையில் நியமித்து மாநகர அபிவிருத்திகளை முடக்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், 2020இல் பாராளுமன்றத் தேர்தலில் பூச்சியத் தோல்வியடைந்தவர், ஐக்கிய தேசிய கட்சியை தலைமையேற்று வழிநடத்தியவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் ஆவார். இவர் பாராளுமன்றத்தில் மக்கள் வாக்குகள் மூலமாக, மக்கள் இறைமை மூலமாக ஒரு ஆசனத்தைக்கூட பெற முடியாத ஒருவர். இப்படியான ஒருவர் உளவியல்ரீதியாக மக்களையும் தேர்தலையும் கண்டு அஞ்சவே செய்வார். இவர் தனது உச்சமான அதிகாரத்தையும், தந்திரோபாயத்தையும் கொண்டு தேர்தல்களை இயன்றவரை தவிர்க்கவே செய்வார். தன்னை நிராகரித்த மக்களைப் பழி தீர்ப்பது போன்று ஜனாதிபதி செயற்படுகின்றார்.

அதேவேளை, தம்மைத் தேர்ந்தெடுத்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படுவதுபோல் தெரிகிறது.

அதன் அடையாளமாக தேர்தல்கள் தவிர்க்கப்படுகின்றன. தேர்தலைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள் பொலிஸ் இராணுவ பலத்தினால் ஒடுக்கப்படுகின்றனர். அதில் இரு உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. மக்கள் இறைமையற்ற ஜனாதிபதி, மக்கள் போராட்டத்தினால் நிராகரிக்கப்பட்ட பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பாதுகாவலராக மாறிவிட்டார். மக்களின் பணத்தை ஏப்பமிட்ட, மோசடிகள் செய்த ஆட்சியாளர்களின் பாதுகாப்புக் கவசமாக ஜனாதிபதி மாறியுள்ளார். நாட்டைக் கொள்ளையடிப்பது மட்டுமல்ல குற்றம், கொள்ளையர்களைப் பாதுகாப்பதும் குற்றமாகும் என்பதை ஜனாதிபதி அறிந்துகொள்ள வேண்டும்.

## போடியார் புலம்பல்!



**காசி கிடைத்தவுடன் தேர்தல் நடக்குமாம் எண்டு யாழ்ப்பாணத்தில வீணை கட்சி அமைச்சர் டக்ளஸ் சொல்லியிருக்காரு எலுவா..? பொம்புள கிடைச்சா கலியாணம் முடிப்பன் எண்ட மாதிரியான கத எலுவா இது.. அடே தம்பி எங்க இருந்துடாம்பி காசி எடுக்கிற எண்டதயும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்! மத்தியில் காட்டாச்சி மாகாணத்தில் மாட்டாச்சி.. எண்டு மக்கள பேய்காட்டிற மாதிரி மறுகா இந்த கதய கதச்சி வீண வாசிக்கப்போறாராக்கும்!**

# சுற்றுலா சென்ற நால்வர் நீரில் மூழ்கி மாயம்

## அவர்களைத் தேடும் பணி தீவிரம்

(திகாமடுல்ல, மாவடிப்பள்ளி செய்தியாளர்கள்)

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்வேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற நான்கு இளைஞர்கள் செவ்வாய்க் கிழமை (21) காணாமல்போயுள்ளனர். அவர்கள் நால்வரும் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களிலிருந்து தனியார் கல்விநிலைய மாணவர்கள் 10 பேர் கொண்ட குழுவினர் சுற்றுலா சென்றுள்ளனர். இவர்கள் நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காகச் சென்ற நிலையில், நான்கு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்கள் 22 மற்றும் 23 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு காணாமல்போயுள்ளனர். இவர்களை தேடுபணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சுனாமி தொடர்பிலான பொய் வதந்திகளை நம்பவேண்டாம்

## அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

சுனாமி தொடர்பான எந்தவித எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. பொய் வதந்திகளை நம்பவேண்டாம் என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதி பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் ஏற்படப் போவதாக மட்டக்களப்பில் பரப்பப்படும் தகவல் உண்மைக்குப் புறம்பானது. அந்தத் தகவலில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லை. மேலும், இவ்வாறான போலித் தகவல்களை நம்பவேண்டாம் எனவும் அவ்வாறான அனர்த்தங்கள் நிகழ வாய்ப்பிருப்பின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் முற்கூட்டியே தகவல்களை அறியத்தரும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதி பணிப்பாளர் தெரிவித்தார்.





**திருகோணமலை, மொரவெவ - அவ்வை நகர் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (20) அருட்திரு தேவகுமார் தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை சேகர மெதடிஸ்ட் தேவாலயங்கள் சார்பில் "பகிர்வோம் மகிழ்வோம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு திருச்சபை உறுப்பினர்கள் மற்றும் அருட் பணியாளர்கள் இணைந்து பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.** (கிண்ணியா செய்தியாளர், அப்துல்சலாம் யாசீம்)

# பிளாஸ்ரிக் பாவனையின் பாதிப்பு குறித்த வீதி நாடகம்





(கல்குடா செய்தியாளர்)

'பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை குறைப்போம் சுற்றுச்சூழலை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினர் பல்வேறு வேலைத்திட்டங்களை கிராமங்கள்தோறும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில், மக்கள் மத்தியில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை எடுத்துக்காட்டும் வகையிலான வீதி நாடகம் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினர், CBM நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சுங்கான்கேணி கிராமத்தில் திங்கட்கிழமை(20) மாலை அரங்கேற்றினர்.

வை.எம்.சீ.ஏயின் திட்ட உத்தியோகத்தர் செ.பிறின்ஸ் அலெக்ஸ் தலைமையில் இடம்பெற்ற வீதி நாடகத்தில் கோறளைப்பற்று சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.ஜெயசேகர், பிரதேச செயலக, பிரதேசசபை உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளி அமைப்பினர் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வீதி நாடகத்தினை கதிரவன் நாடகக் குழுவினருடன் மாற்றுத்திறனாளிகள் இணைந்து நடித்து வழங்கியிருந்தனர். இவ்வீதி நாடகம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து இலங்கை மீனவர்கள் அறுவர் கைது

## உளவுப் பிரிவு பொலிஸ் விசாரணைக்குப் பின் சென்னை புழல் சிறையில் அடைக்க நடவடிக்கை



இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 6 பேரை தூத்துக்குடியைச் சேர்ந்த இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்துள்ளதுடன், அவர்களது படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைதான மீனவர்களான முகமது ரசார், நுவான், பிரகீத், ரூவான், மதுரங், அப்துர் ரஹ்மான் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் தூத்துக்குடி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து படகுமூலம் மாலை 4.30 மணியளவில் தருவைகுளம் கடற்கரைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கடலோர பாதுகாப்புக் குழும பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கடலோர பாதுகாப்புக் குழும பொலிஸார் தருவைகுளம் கடலோர பொலிஸ் நிலையத்தில் வைத்து 6 மீனவர்களிடமும் விசாரணை நடத்தினர்.

மேலும் கியூ, ஐபி உள்ளிட்ட மத்திய, மாநில உளவுப் பிரிவு பொலிஸாரும் இலங்கை மீனவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்குப் பின்னர் இராமநாதபுரத்திலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சென்னை புழல் சிறையில் அவர்களை அடைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உலக செய்திகள்

# உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலிடம்

## 112ஆவது இடத்தில் இலங்கை



'உலகின் மகிழ்ச்சியான நாடு' தரவரிசைப் பட்டியலில் பின்லாந்து முதலிடம் வகிப்பதாக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கையில் இலங்கை 112ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் எந்தளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்; அதற்கான சூழல் எந்தளவு இருக்கிறது என்பதை அடிப்படையாகக்கொண்டு மகிழ்ச்சியான நாடுகளை தரவரிசைப்படுத்தி அதனை அறிக்கையாக வெளியிடுவதை ஐ.நா. வழக்கமாகக்கொண்டிருக்கிறது.

அந்தவகையில் தற்போது வெளியான அதன் அறிக்கையில், மகிழ்ச்சியான நாடுகளின் தரவரிசையும், அதற்கான காரணங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, ஐரோப்பிய நாடான பின்லாந்து தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளது. டென்மார்க் 2ஆவது இடத்தையும், ஐஸ்லாந்து 3ஆவது இடத்தையும், இஸ்ரேல் 4ஆவது இடத்தையும், நெதர்லாந்து 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து, லக்செம்பர்க், நியூசிலாந்து முறையே 6 முதல் 10 வரையிலான இடங்களைப் பிடித்துள்ளன.

கனடா 13ஆவது இடத்தையும், அமெரிக்கா 15ஆவது இடத்தையும், ஜேர்மனி 16ஆவது இடத்தையும், பிரித்தானியா 19ஆவது இடத்தையும், பிரான்ஸ் 21ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

சிங்கப்பூர் 25ஆவது இடத்தையும், ஐக்கிய அரபு இராச்சியம் 26ஆவது இடத்தையும், சவூதி அரேபியா 30ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

ஜப்பான் 47ஆவது இடத்தையும், பிரேஸில் 49ஆவது இடத்தையும், சீனா 64ஆவது இடத்தையும், நேபாளம் 78ஆவது இடத்தையும், பாகிஸ்தான் 108ஆவது இடத்தையும், இலங்கை 112ஆவது இடத்தையும், மியன்மார் 117ஆவது இடத்தையும், பங்களாதேஷ் 118ஆவது இடத்தையும், இந்தியா 126ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. கடைசி இடமான 137ஆவது இடத்தை ஆப்கனிஸ்தான் பிடித்துள்ளது.

## கொலம்பியாவில் இராணுவ ஹெலி விபத்து; நால்வர் பலி



கொலம்பியாவில் இராணுவ ஹெலிகொப்டர் வீழ்ந்து தீப்பிடித்ததில் பெண் அதிகாரியொருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

குயிப்டோ என்ற பகுதியில் இராணுவ தளவாடங்களை விநியோகம் செய்யும் பணியில் இராணுவ ஹெலிகொப்டர் ஈடுபட்டிருந்தது. அதில் ஒரு பெண் உட்பட 4 இராணுவ அதிகாரிகள் இருந்தனர்.

அப்போது திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது. இதில் நான்கு பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

# அங்கோலாவிலிருந்து வியட்நாமுக்கு கடத்தப்பட்ட 7 தொன் யானைத் தந்தங்கள் பறிமுதல்



மத்திய ஆபிரிக்க நாடான அங்கோலாவிலிருந்து வியட்நாமுக்கு கடத்தப்பட்ட 7,000 கிலோ யானைத் தந்தங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

ஹைபோங் நகரின் லோம் துறைமுகத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் வேர்க்கடலை இருப்பதாகக் கூறப்பட்ட கெண்டய்னரை சோதனையிட்டபோது, சிங்கப்பூருக்கு கடத்திச் செல்லப்படவிருந்த 7 தொன் அளவிலான யானைத் தந்தங்கள் சிக்கியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆசிய நாடுகளில் ஒன்றான வியட்நாமை பொறுத்தவரை தந்தம் வர்த்தகம் செய்வது, தந்தத்தை கடத்துவது என்பது சட்ட விரோதமான செயல். ஆனால், யானைத் தந்தங்கள், பாகோலின் செதில்கள், காண்டாமிருக கொம்புகள், புலி சடலங்கள் கடத்தப்படுவதும், பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகவே உள்ளன.

இந்நிலையில், ஹைபோங் நகரின் லோம் துறைமுகத்தின் சுங்க அதிகாரிகள் சோதனை மேற்கொண்டபோது அங்கோலாவிலிருந்து சிங்கப்பூருக்கு கடத்திச் செல்லப்படவிருந்த ஏழு தொன் தந்தங்கள் கெண்டெய்னரில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த மாதம் 600 கிலோகிராம் ஆபிரிக்க யானைத் தந்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கடத்திய நபருக்கு வியட்நாம் நீதிமன்றம் 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காற்றின் வேகத்தால் டெஸ்ட் போட்டியில் வினோதம்






(ரமணி)

வெலிங்டனில் இலங்கை, நியூசிலாந்து ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பலத்த காற்று வீசியதால் இரண்டு விநோத சம்பவங்கள் நிகழ்ந்தன. இரண்டாவது போட்டியில் ஒயிட் வாஷ் தோல்வியை தவிர்க்கும் முனைப்புடன் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை, முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

நியூசிலாந்தில் சற்று அதிகப்படியான வேகத்துடன் காற்று அடிப்பது வழக்கமான நிலையில், இப்போட்டி நடைபெற்ற வெலிங்டன் மைதானத்தில் மார்ச் 20ஆம் திகதி நடந்த 4ஆவது நாள் ஆட்டத்தின் மதிய உணவு இடைவெளிக்குப் பின் அதிகப்படியான காற்று வீசியது. போட்டி நடைபெற்ற பேசின் ரிசர்வ் கிரிக்கெட் மைதானம் திறந்தவெளியாக இருக்கும் காரணத்தால் காற்றின் தாக்கம் அதிகமாக இருந்தது.

பந்து வீசும் ஒரு திசையில் பின்புறத்தில் உயரமான கோபுரங்கள் அமைத்து போட்டியை நேரலையாக படம் பிடித்த படப்பிடிப்பாளர்கள் தொடர்ந்து துல்லியமாக படம் பிடிக்க முடியாத அளவுக்கு காற்று பலமாக வீசியது. அதன் காரணமாக பெவிலியன் இல்லாமல் அதிக திறந்தவெளியுடன் பின்புறத்தில் மரங்கள் இருக்கும் அடிலெய்ட் ரோட் திசையில் படம் பிடித்துக்கொண்டிருந்த படப்பிடிப்பாளர்கள் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கீழே இறங்கினார்கள். அதனால் ஒரு கட்டத்தில் அந்தப் போட்டி ஒரு கோணத்திலிருந்து மட்டும் ஒளிபரப்பப்பட்டது. ரசிகர்களுக்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அதை விட மைக்கேல் பிரேஸ்வெல் வீசிய 121 ஓவரின் ஒரு பந்து கையில் இருந்து விட்ட பின் காற்றில் வேகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து இறுதியில் பிட்ச் வரையறுக்கப்பட்டிருக்கும் கடைசி வெள்ளை கோட்டை தாண்டி தரையில் பட்டது. அதை விக்கெட் கீப்பர் கச்சிதமாக பிடித்தும் பிட்சுக்கு வெளியே வந்து சென்றதால் நடுவர் வைய்ட் வழங்கினார். காற்றால் நடந்த இந்த இரண்டு வினோத நிகழ்வுகள் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

# தலைமைக்கு விடைகொடுக்கும் திமுத்

இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அயர்லாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள 2 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை யடுத்து குறித்த பதவியிலிருந்து விலகுவதாக இவர் தெரிவுக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுத் கருணாரத்ன கடந்த 2019ஆம் ஆண்டு தினேஸ் சந்திமாலுக்குப் பதிலாக டெஸ்ட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். முதல் தொடரில் தென்னாபிரிக்க அணியை அவர்களுடைய சொந்த மண்ணில் இலங்கை அணி வீழ்த்தி வரலாற்று வெற்றியை பதிவுசெய்தது. இதனால் தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடர் வென்ற முதல் வெளிநாட்டு அணியின் தலைவர் என்ற பெருமையும் இவரை சார்ந்திருந்தது.

திமுத் கருணாரத்ன தலைமையில் இலங்கை அணி இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் 10 வெற்றிகள், 9 தோல்விகள் மற்றும் 7 போட்டிகளை சமப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ராஜஸ்தான் அணியில் இணையும் யாழ். வீரர் வியாஸ்காந்த்



2023ஆம் ஆண்டுக்கான இந்திய ப்ரீமியர் லீக் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வலைப் பந்துவீச்சாளராக செயற்பட யாழ். மண்ணைச் சேர்ந்த சுழற்பந்துவீச்சாளர் வியாஸ் காந்த் அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை 19 வயதின் கீழ் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான வியாஸ்காந்த் லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிங்ஸ் அணிக்காக ஆடிவருகிறார். இறுதியாக நடைபெற்றுமுடிந்த லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிங்ஸ் அணிக்காக ஆடிய வியாஸ்காந்த் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் ஐந்து பந்துவீச்சாளர்களில் ஒருவராக இடம்பிடித்திருந்தார்.

வியாஸ்காந்த் மிக விரைவில் இந்தியா பயணமாகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட ஜாம்பவானுமான குமார் சங்கக்கார, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கிரிக்கெட் இயக்குனராகவும், தலைமைப் பயிற்சியாளராகவும் செயற்பட்டு வரும் நிலையில், வியாஸ்காந்த்திற்கு இந்தப் பருவத்திற்கான ஐ.பி.எல். தொடர் முழுவதும் சங்கக்காரவின் ஆளுகையில் பயிற்சிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வியாஸ்காந்த் கருத்து தெரிவிக்கையில்,

பங்களாதேஷில் விளையாடியது எனக்கு நிறைய அனுபவங்களும், சர்வதேச விளையாட்டு வீரர்களின் அறிமுகங்களும் கிடைக்கப்பெற்றன. தற்போது ஐ.பி.எல்லில் ராஜஸ்தான் அணியின் வலைபந்து வீச்சு வீரராக எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. என்னுடன் குமார் சங்கக்கார கதைத்திருந்தார். எனது கிரிக்கெட்டை அடுத்துகட்டத்திற்கு எடுத்து செல்ல கவனிக்கிறேன் என்றார். அது தொடர்பில் சிலருடன் கதைத்து எனக்கான வாய்ப்புகளைப் பெற்று தந்துள்ளார். அவருக்கு எனது நன்றி களை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு கிடைத்துள்ள வாய்ப்புகளை நான் முடிந்தளவு பயன்படுத்தி என்னை வளர்த்துக்கொள்வேன் - என்றார்.

# கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டியில் கம்பர் இல்லம் சம்பியன்







(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு விளையாட்டுப் போட்டி அதிபர் கே.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் கலந்துகொண்டார். விசேட அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனுசியா ராஜசேகர், கணக்காளர் சுதர்சனா சிவகுமார் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ரி.இதயகுமார், என்.நேசகஜேந்திரன், எஸ்.சுரேஸ் உட்பட அதிபர்கள், பழைய மாணவர்கள், ஆலயங்கள், விளையாட்டுக்கழகங்கள், பொதுநல அமைப்புகள், உத்தியோகத்தர்கள், சமுக ஆர்வலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

பாடசாலை மாணவர்களினால் அரங்கேற்றப்பட்ட கிராமியக் கலைசார்ந்த உடற்பயிற்சி கண்காட்சி அதிதிகள், பொதுமக்கள் அனைவரையும் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. போட்டிகளின் நிறைவில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் மற்றும் வெற்றிபெற்ற இல்லங்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. இங்கு வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய இல்லங்களுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன. இதில் கம்பர் இல்லம் முதலாம் இடத்தினையும், இளங்கோ இல்லம் இரண்டாம் இடத்தினையும், வள்ளுவர் இல்லம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7